# இந்து தர்மம்

1995 மாசி மீ

சிவராத்திரி — சிறப்பு மலர்



வெளியீடு :

இந்து சமயப் பேரவை — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# “ இந்து தர்மம் ”

## மாதாந்த ஆத்மீக சஞ்சிகை

வியனுல கனைத்தையும் அமுதென நுகரும்
வேதவாழ்வினைக் கைப் பிடித்தோம்.


மலர் 5 1995 மாசி

வெளியீடு :

இந்து சமயப் பேரவை — யாழ்ப்பாணம்

தனிப் பிரதி : ரூபா 10/-

ஆண்டுச் சந்தா : ரூபா 100/-


## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| எமது சிந்தனை | 113 |
| மகாசிவராத்திரியின் மாண்பு | 116 |
| அவளால் வந்த ஆக்கம், இவ்வாழ்க்கை எல்லாம் | 118 |
| சிவாகமத்தில் எண்களும் அளவுகளும் | 120 |
| நான் கண்ட சுவிற்செலாந்து | 121 |
| இந்துக்களும் இறை வழிபாடும் | 124 |
| கனடாவில் சைவசமயம் | 126 |
| நவக்கிரகம் பற்றி ஓர் ஆய்வு | 129 |
| திருத்தொண்டர் புரா்ண வரலாறு | 131 |
| ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் குருபூசை | 134 |
| கதிரைவேற்பிள்ளையவர்களின் நற்பணிகள் | 185 |
| பூதமூர்த்தி | 139 |
| சோமகாந்தராஜா மகனுக்குக் கூறிய அறிவுரை | 140 |
| சந்தேகம் தெளிதல் | 141 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

...சன நூலகம்
மாநகராட்சி மன்று
-7-3-1995
யாழ்ப்பாணம்

எமது சிந்தனை

# தர்மத்தின் உள்ளுறைகள்

'தர்மம்', 'அறம்' என்பன மொழிவகையால் இரண்டு; பொருள் வகையால் ஒன்று.

தர்மம் என்பதைச் செயல் வடிவிற் காணும் வாய்ப்புகள்தான் பெரும்பான்மை. அகதிகள் ஆதரிக்கப்படும் போதும் அநாதைகள் பராமரிக்கப்படும்போதும் செவிப்புலனற்றோர் கட்புலனற்றோர் இலவசக் கல்வி வசதியளிக்கப்படும்போதும் சமூகப் பொதுநல வசதிகள் இலவசமாக அளிக்கப்படும்போதும் சமயப் பணிகள் செய்யப்படும்போதும் அவை தருமம் என அறிவோம். இவை உலகப் பொதுவானவை. ஒரு வகையில் கீழ்நாடுகளை விட மேல்நாடுகள் இவற்றிற் பத்திரட்டியாக முன்னேறி வருவதுங் கண்கூடு. ஆனால் இந்துக்களின் தர்ம நோக்கு இந்த அளவில் அமைந்து விடுவதில்லை. செய்பவரின் வாழ்க்கைப் பண்பாட்டுநிலை உளப் பண்பாட்டுநிலைகளின் பொருந்துமாறு பற்றியும் விசாரிக்கப்படும்.

திருநெல்வேலியிற் பரமேஸ்வரக் கல்லூரி உருவான காலத்தில், 'ஒருவர் அதற்கொரு தொகை உதவ முன்வருகிறார்' என இன்னொருவர் வாயிலாக அறிய வந்தபோது அதற்குப் பொறுப்பாயிருந்தவர், 'அவருக்கு அந்தப் பணம் வந்தவழி பற்றி விசாரித்தறிந்த பின் ஏற்க மறுத்து விட்டதாக ஒரு செய்தி. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கருத்துக்களில் ஒன்று, பாபச் சார்பில்லாத நன்முயற்சியான தன்னுழைப்பால் வந்த பொருளைச் சற்பாத்திரத்திற் செலவிடுவதே தருமம் எனப் பேசுகின்றது. மற்றோர் பொருள் கொண்டோ முதுசொம் கொண்டோ வாழ்க்கை நடத்துவதோ அறஞ் செய்வதோ தருமமல்ல என்பதற்காகத் தான் பலநாளுழன்று கனிந்து முற்றிய காதல் மணத்தையும் பின்போட்டு விட்டுக் காதலன் பொருள்வயிற் பிரிவு மேற்கொள்வதெனப் பழந் தமிழறங் கூறுந் தொல்காப்பியஞ் சொல்கின்றது. நெதர்லந்துப் பால்மாவை இரவல்வாங்கி விநியோகச் செலவும் அவர்களிடமே பெற்றுக் குழந்தைகளுக்குக் கொடுப்பது காந்தீயமா? என்ற சர்ச்சையெழுந்து வவனியாக் காந்திய சேவைச் சங்கம் பிளவுண்ட செய்தி பசுமை நினைவில் உண்டு. ஆரோ ஒருத்தி அமுது படைத்த இலட்சணக் கேட்டைச் சகிக்காது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே – மாணொக்க வாய்திறக்க மாட்டாதே – என்பெல்லாம் பற்றி எரியுதே ஐயையோ – அன்பிலாளிட்ட அமுது" – என்னும் ஔவைதமிழ் அகில மறியும். உடைந்துருகுவார் உள்ளத்தில் தானாகப் புகுஞ்சிவன், உளப்பண்பாடற்றோர் பூசைக்குக் கூசி யொதுங்கிக் கொள்வதாக, "பொக்க மிக்கவர் பூவும் நீருங்கண்டு நக்குநிற்பன் அவர்தமை நாணியே" என்ற அப்பர் சுவாமிகள் அருளிச் செயல் கூறும். உலகப் பொதுநோக்கிலிருந்து இந்துக்களின் தர்ம நோக்கு வேறுபட்டது என்பதை இவையெல்லாம் ஒரே குரலாக எடுத் தியம்புகின்றன.

இந்து நோக்கில் தர்மத்தின் யதார்த்த பாவம் மூன்று தன்மைகளில் வைத்து மதிப்பிடப்படுகின்றது. முதலாவது ஆள், அதாவது செய்பவரின் உளப்பண்பு. இரண்டாவது அவரது நடைமுறை வாழ்க்கைப் பண்பாடு. மூன்றாவது அவரது தர்மச் செயல் தரம்.

திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் பற்றிச் சொல்வ தேனும் அறநூல் என்பதே அதற்குப் பிரீதிப்பாங்கான பெயர். காரணம் பொருளென்றாலும் அறநெறியில், இன்பம் என்றாலும் அறநெறியில் வந் தாலன்றி அவை பொருளோ இன்பமோ அல்ல என்ற அந்நூலின் நிலைப் பாடு தான். இந்நூல் அறன் வலியுறுத்தல் என்ற பெயரில் முகவுரை கூறி அதன்பின்பே அறத்துப் பால் கூறுகின்றது. முகவுரைப் பகுதியின் முக்கியப் பொருள் ஆளின் உளப்பண்பு. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் என்பது அதன் மையம். ஐயவிபரீதங் கொள்ளுதலும் கறங்கும் குரங்கும் வண்டும் போல நிலைகொள்ளாதலைதலும் மனமாசு. அது இல்லையேல் அதுவே, அவ்வளவினதே அறம். அடுத்த குறள் சொல் வது, அழுக்காறவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா றியன் றது அறம் என்பது. அழுக்காறு முதலிய நான்கு தீங்கும் அற்ற உள்ள நிலை அறம். இயன்றது – அமைந்தது. இன்னும் வேண்டுமானால், அந்த அறநிலை உள்ளத்தோடு மேற்கண்ட தருமச் செயல்களல்ல அஃது டையவன், தன்பொருட்டுச் செய்யும் உண்டல் உறங்கல் போன்றவை கூட அறம் எனலாம். இன்ன தென்று சுட்டாது பொதுப்பட இயன்றது என் றது காண்க. "அன்றறிவா மென்னாது ......" என்ற குறள் சொல்வது எந்நாளும் தர்ம ப்ரஜ்ஞை யோடிருப்பதே அறம் என்ற கருத்தை. அது தான் ஔவைப் பிராட்டியும் 'அறஞ்செய விரும்பு' என்பதனாற் சொன் னதும் என்க. இங்ஙனம் இவை மூன்றும் உள்ளநிலையறம் ஆம். அல்லாவிடில் நிலைவிட்டுப் பெயராமலே தியான உறைப்பில் இருக்கும் முனிவர்களை அறவோர் என்பதும், அவர்களே உலகுக்கு அறமுணர்த்துவர் என்பதும் அவரை உண்பித்தல் விசேட அறம் என்பதும், அர்த்தமில்லாமற் போய் விடும். மேல், முதலாவது என்றது இதனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, அறத்துப்பால் சொல்பவற்றின் முக்கியப் பொருள் செய்பவரின் வாழ்க்கைப் பண்பாட்டுநிலை, இல்வாழ்வான் பழிக்கஞ்சிச் சம்பாதித்தலும் பகுத்துண்ணுதலும் பழியஞ்சிப் பாத்தூண் ஆகும். அதுவே அறம். தெய்வத்தை நினையுமுன்னமே கணவனை நினையும் மனைவி செயல் "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்ற செயல், அதுவே அறம். இருவருங் கூடி அறிவறிந்த மக்கட் பெறின் அது அறம். பகையைப் போக்கவும் அன்பைச் சாதனமாகக் கொண்டால் அது அறம். பிறன்பழிப் புக்காளாகாத இல்வாழ்க்கையே அறம். என்கின்றபடி, அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்றதே இவை எல்லாவற்றுக்கும் பிரமாணம். இச்செய்யுளிற் பரிமேலழகர் 'ஏ' ஐப் பிரித்துக் கூட்டியதும், 'அஃது' துறவறம் என்றதும் தேவைக்கு உதவாத வேலை. புலமைப் பிராந்தியுமாகலாம். அது நிற்க, பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறன். அதே அறந்தான். 'அறன் அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும் திரு.' வாழ்க்கையின் கடைப்பிடியே அறம் என்றாற் பின்னை என். இவ்விரண்டு குறளும் முன் சொன்னதற்கு விசேட பிரமாணமாம் — இவை வாழ்க்கைநிலை யறம், இரண்டாவதென்றது இதனையே.

திருக்குறள் ஐம்புலத்தாறோம்பல், விருந்தோம்பல், ஈகை, ஒப்புரவு முதலாகச் சொன்னவை — செயல்நிலை அறம். மூன்றாவதென்றது அதையே.

இனி, அறம் பற்றி அருமையான பேச்சு என்னும் படி ஒருவர் பேச்சு இருக்கும். ஆனால் மற்றொருவரைப் புறங்கூறும் வசனம் ஒன்றேனும் அதற்குள் தலைநீட்டுமானால் மீதி அத்தனையும் வீண். அவர் நெஞ்சார அறம் பேசிற்றிலர் என்பதனால். திருக்குறள் 185 தான் இப்படிச் சொல்கிறது. என்றால், பின்னை என்சொல்வது நாம். தர்மம் செயல்நிலை மட்டில் இல்லை. அதற்கு வாழ்க்கைநிலை உள்ளுறை உள்ளநிலை, அதற்குள் ஒரு உள்ளுறை; இரண்டும் துப்புரவில்லாதபோது செயலறம் ஒன்றும் பண்ணுதற்கில்லை என்போம்.

---

## அகிலமே போற்ற வளர்க!

சி. சபாநாதன்
சங்கரத்தை

''இந்து தர்மம்'' என்றிடும்
ஏடு கண்டேன்
சிந்தைக்கினிய நல்லறிஞர்
சிறப்பம்சம் கண்டேன்
சுந்தரத் தமிழ் நூலோர்
சுவை யம்சம் கண்டேன்
அந்தம் ஆதியில் லீசனருளால்
அகிலமே போற்ற வளர்க.

வேதமோடு ஆகமம் கற்ற
நல்லறிஞர் கருத்தும்
ஓதி உணர்ந்தநல் லறிஞர்
உரைக்குஞ் சொல்லும்
தீதினை நீக்கும் நல்லபல
கருத்துக்கள் ஏந்தி
ஆதவன் போல் எங்கும்பரந்து
அகிலமே போற்ற வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரியின் மாண்பு

திருமுறைப் பாராயணச் செல்வர்
சிவ. சண்முகவடிவேல்

திருச்சிற்றம்பலம்

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலாஎன் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருவொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

இந்நூல் என்நுதலிற்றோ எனின் தமிழ் நுதலிற்று, இதில் தமிழ் உணர்த்துவது எதையோ, சைவமும் அதையே உணர்த்திக் கொண்டிருக்கிறது. அதுதான் அன்பு. 'நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே ; ஆளாய வன்புசெய்வோ மட நெஞ்சே ...' என்பது முத்தமிழ் விரகர் அருள் வாக்கு. ஆளுடைய அருள்வாக்கு இது; '... கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்; அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே.'

– அப்பர் சுவாமிகள்

சொல்லன்பு தமிழ் தெரிந்தவர்கள் எல்லாருக்கும் தெரியும். பொருள் அன்பு உணர்ந்தவர்களை விரல் விட்டு எண்ணலாம். அவர்களில் கண்ணப்ப நாயனார் ஒருவர். ' பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார்' என்று மாத்திரமா சேக்கிழார் பெருமான் நமக்கு உணர்த்த வந்தார். '... வாயின் மஞ்சனநீர் தன்னை, விளைத்த அன்புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார். என்பதுங் கூட

அந்த அன்பின் தன்மையை உணருவதற்கு எத்தனை படிகள் ஏறிச்செல்ல வேண்டும். ' ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டேன் உள்ளமும்போய் நான் கெட்டு...' என்று மணிவாக்கால் உணர்த்துவார் வாதவூரர்.

இந்த உண்மையைச் செல்வச் செழிப்பால் நாராயணர் உதாசீனம் பண்ணினார். பிரமதேவரும் தமது கல்விச் செருக்கால் முதலில் மறுத்தார். பின்னர் அனுபவ வாயிலாகத் தமிழ் என் நுதலிற்றோ அதை உணர்ந்து கொண்டார். உணர்ந்து கொண்டது மாத்திரம் அல்ல. கல்வி செல்வப் பேற்றில் அழுந்தித் தலைகால் புரியாமல் தடுமாறித் தன்மானம் இழந்த தம் புதல்வன் தக்கனுக்குத் தலையாய ஞானமாகத் தருவதால் தத்தளிக்கும் துன்பத்தில் கைகொடுத்துக் கரையேற்றியவருமானார்.

' அவ்விடையா மிருவர்களு
மமலன்ற னடிவணங்கிச்
செவ்விதினின் றவனருளிற்
றிளைத்திதனைச் செப்பினமால்
மெய்வகையா மன்பின்றி
விளங்காநின் னியன்மறையு
மிவ்வகையென் றுணராதே
யாங்காணற் கெளிவருமோ '
(கந்தபுரா.: அடிமுடி – படலம்:8 8.)

இதுதான் மகாசிவராத்திரியின் மாண்பு. முழுச்செல்வத்தினாலோ முழுக் கல்வியினாலோ முழுமுதற் பரம்பொருளை முற்றுணர முடியாது என்பதை முற்றுணர்ந்து முதுவர்கள் இருவர் முழுவுலகத்திற்கும் முறையாக உணர்த்திய முழு இரா சிவராத்திரி.

' ஆத லாலவ னருள்பெறி
னவனிய லறியு
மோதி யாகுவ ரல்லரேற்
பலகலை யுணர்ந்தென்
வேத நாடியென் னிறையுமன்
னவனிலை விளங்கார்
பேதை நீரரு மாங்கவ
ரல்லது பிறரார். (ஷி...97)

மாசிமாதம், திங்கட்கிழமை, மகாசிவராத்திரி. காலத்தால் ஒரு நாள் முன்னான சனிக்கிழமை. பூராட நட்சத்திரம். மர்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூராடம் காரிநாயனாரின் திருநாள். காரி நாயனாரோடு இந்தப் பிரம விட்டுணுக் களை ஒப்பிட்டுப் பார்த்தால் சிரிப்புத் தான் வரும்.

காரிநாயனார் திருக்கடவூரில் வந்துதித் தவர். மறையாளர் குலத்தவர். வண்தமி ழின் துறையான பயன் தெரிந்தவர். 'சொல் விளங்கிப் பொருள் மறையக் குறையாத தமிழ்க்கோவை முறையாலே தொகுத் தமைத்தார். முடியுடை மூவேந்தர் பால் பழகுவார். அவர்களிடத்தில் பெற்ற பெருஞ் செல்வங் கொண்டு;

'சங்கரர் இனிதமரும் தானங்கள் பல சமைத்தார்.

"விடையவர்தம் காவுற்ற திருக்கயிலை மறவாத கருத்தினராய் இருந்தார்". ஆய்ந்தவுணர் விடையறா வன்பினால் ... அணிகங்கை தோய்ந்த நெடுஞ்சடை யார்த மருள்பெற்ற தொடர்பினால் வாய்ந்த மனம் போலுடம்பும் வடகயிலை மலைசேர்ந்தார்".

நாயனார் அன்பினால் மனம்போல உடம்பும் திருக்கயிலை சேரப்பெற்றார். இந்தப் பிரம விட்டுணுக்கள் ஆணவத்தால் தம் உருவம் நீங்கிப் பிறிதுருவமாகி அன் பின் வழியது சிவகதி என்பதை உணர்த்த என்ன பாடுபடுகிறார்கள்;

மகாசிவராத்திரியில் நாலுவேளைப் பூசைக்கு உகந்த மலர்கள்:

வான்குலாம் வில்லுவ மருமென் பாசடை
தேன்குலா மரையிதழ் செய்ய சாதிவீ
கான்குலாம் வலம்புரி கடவுட் டொல்பெயர்
நான்கியா மத்தினு நவின்று சாத்தியே.
(வில்வம் தாமரை மல்லிகை நந்தியாவர்த்தம்)

நாலு காலத்துக்கான நிவேதனம்:
ஏயவான் பயறுபா லெண்ண லோதனந்
தூயநல் லுணவிவை தொகுத்துக் கண்ணுத
னாயகன் முன்னுற நான்கி யாமத்து
நேயமொ டம்முறை நிவேதித் தேத்தியே.
(பயற்றன்னம், பாலன்னம், எள்ளன்னம்), சுத்தான்னம்.

(கந்: உ. க. நீ. படலம்: 23, 24.)

மைக்களமு மான்மழுவும் வரதமுட னபயமுறு
மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணுஞ்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்

அன்பின் வழிநின்று அயன் அரி ஆற்றிய அர்ச்சனைக்கு அரனார் அவ்வாறு அருள் பாலித்தருளினர்.

## விளாங்காய்ப் பச்சடி செய்யும் முறை

ஒரு விளாங்காயை உடைத்துத் துருவிச் சாற்றைப் பிழிந்து விட்டு அதனுடன் அரிந்த காய்மிளகாயும் வெங்காயமும் அளவாகச் சேர்த்து, பிறகு காணக்கூடிய பொடி செய்த உப்பும் கொஞ்சம் கட்டித்தயிரும், அல்லது தேங்காய்ப்பாலும் கூட்டி நன்றாகக் குழைத்து அதன் பின் தாளிதஞ் செய்து போடுக.

## தேன்சேர்ந்த விளாம்பழப் பச்சடி

நன்றாகக் கனிந்த ஒரு விளாம்பழத்தைச் சிறிது நீர் விட்டுப் பிசைந்து, வித்து நீக்கி அதில் ஒரு பெரிய தேக்கரண்டி தேன் விட்டுக் குழைத்துக் கொண்டு சொற்ப மாகச் சீரகமும், கடுகும், நெய்யில் தாளிதஞ் செய்து அப்பச்சடியிற் கொட்டிக் கிளறி விடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அவளால் வந்த ஆக்கம், இவ்வாழ்க்கை எல்லாம்

ஈதொரு பிரச்சினை. கடவுள் வாக்கும் மனமுங் கடந்த அதீதநிலையில். அவர் இலட்சணம், சத், சித், ஆனந்தம். இங்கே, நடக்கிறதுக்குள் மனித ஆற்றல்களைக் கடந்த மற்றொன்று கிடந்து கூத்தாடுவதுந் தெரிகிறது. அத்துடன் இங்குள்ளது முழுதும் அசத்தும் அசித்தும் ஆனந்தத்தின் எதிர்ப் பக்கமும். அந்தக் கடவுள் எப்படியோ இந் தப் பிரபஞ்சத்தோடு சம்பந்தித்திருக்கிறார் என்றால் அது எப்படி? இதுதான் பிரச் சினை. இந்தச் சிக்கலுக்குள் இறங்கப் பயந்து இல்லை இல்லை அவர் அங்கேதான், இங்கு அவர் இல்லை, இங்கத்தைய பொறுப்பை மனிதரிடம் வைத்துவிட்டு அவர் தன்பாடு என்றார்கள் சில விவேகிகள். கொஞ்சம் அறிவுத் தைரியத்தோடிறங்கித் துழாவிப் பார்த்துவிட்டு, அது விஷயம் இதுதான். என்னென்றால், அது, அவர் தான் இது வாய் உருமாறியிருக்கிறது என்றார்கள் சில விவேகிகள். அவர்களுக்குள் கொஞ்சம் விற்பத்தி கூடினவர்கள் அப்படிச் சொல்லப் படாது. அது அதுவாயிருக்கப் பார்க்கிறவர் களுக்கு இதுவாகத் தெரிகிற அளவுதான். இங்குள்ள நான், என் உலகம் எல்லாம் உண் மைக் காட்சிப் பிறழ்வு அதைவிட மற்றெதுவு மேயில்லை என்று விட்டார்கள். இங்கே மூன்று பகுதியைச் சந்திக்கிறோம். முதற் பகுதிக்குக் கடவுளை இங்கு இறக்காமல் வைத்து அவர் செயலுக்கு மனிதரைப் பிரதிநிதிகளாக்கி விட்ட திருப்தி. ஆனால் மனிதர் மாத் திரத்திலா இங்கு எல்லாம் அமைகிறது என்ற விசாரம் அவர்களுக்கு இல்லை. இரண்டாவது பகுதிக்குத் தான் சொன்னதை விட வேறுவிதமாய் ஆருஞ் சொல்லிவிட முடியாதென்ற கெறுவம். ஆனால் நீர் ஆவியாய் உருமாறினாலும் அதில் நீர்த் தன்மைதான் இருக்கிறது. கல்தன்மையோ மாத்தன்மையோ இல்லை. குளிரவைத்த வுடன் மீளவும் நீராகிறது. இங்கு என்ன வென்றால் அதன் சத்துச் சித்து ஆனந்தங் கள் எங்கே? இதன் அசத்து அசித்து அநா நந்தங்களெங்கே? என்ற பாடாயிருக்கிறது என்ற விவேகமில்லை. இனி, அது அப்படித் தானிருக்க இது இப்படித் தெரியும் என்றால் அது இந்திர ஜாலத்தின் மூத் தண்ணை என்பது மூன்றாவது பகுதிக்கு விளங்கினதாயில்லை. சைவ சித்தாந்தம் இவற்றுக்குத் தலைசாய்ப்பதில்லை. இங்கே இயக்கம் மட்டுமா இருக்கிறது? இயக்கு வதும் ஒன்று, அதன் மூலம் தன்னைத் தோற்றிக் கொண்டிருக்கிறதை மூத்து முதிர்ந்த முதியோரநுபவம் அச்சுறுத்தி அழுத்தி வைத்திருக்கிறது. கையிலெடுத்த தும் பிதிர் பிதிர்ந்து போகிற மண்ணுக்கு அநந்தகோடி கனரக உருப்படிகளையும் தாங்குந் திண்மையைக் கொடுத்துக்கொண்டு அதன் மூலம் தன்னைத் தோற்றிக் கொண் டிருக்கிறது அது. கண்ணுக்குப் புலப்படாத பவனத்துக்கு மலைச் சிகரத்தையே முறித் துத் தள்ளும் இராட்சத வேகத்தைக் கொடுத்துக்கொண்டு அதன் மூலம் அது தன்னைத் தோற்றிக் கொண்டிருக்கிறது. நீரில் தண்மை வைத்தோன் திண்டிறல் தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர் வானிற் கலப்புவைத்தோன் மேதகு காவின் ஊக்கங்கண்டோன் வெளிப்பட மண்ணில் திண்மை வைத்தோன் என்பது திருவாசகம். இதில் எது வெளிப்பட என்றால் தன் உண்மை வெளிப்பட என்றாகிறது. இப்படி இன்னும் உள்ள ஆதாரங்கள் பலபல. எனவே சிவன் சிவனாயிருக்க அவன் ஆற்றல் இங்கு எல் லாவற்றினுங் கலந்து நின்று எல்லாம் நடத்திக்கொண்டிருக்கிறது. இங்குள்ள தோற்றங்கள் சகலதையும் மாயை என்ற மூலத்திலிருந்து தோற்றுவித்ததும் அது உயிர்களோடு உடனாய் நின்று அவைக ளுக்கு அறிவூட்டி ஆற்றலூட்டித் தொழிற் படுவித்துத் தொழிற்பலன் நுகரவும் வைத்து உரிய பக்குவம் அடைந்தபோது அவை களைச் சிவபோகத் தொட்டிலிலிட்டாட்டி மகிழ்வித்துக்கொண்டிருப்பது அது. பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் கருணையும் பொறுப்புணர்ச்சியுமுள்ள ஒரு கிருஹ தர்மிணியின் கைங்கரியம் போல்வதோர் பரம கைங்கரியத்தை அது நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. அதுவே சிவ சக்தி, அதன் மயம், ஆற்றல் மயம். ஆற்றல் சிவனாற்றல். இந்த உறவில் சிவனுக்கு அவள் சஹதர்மினி, அவர் கடமைகள் - உயிர்களுக்காக ஆற்றும் ஐந்தொழிற் கடமைகள் எத்தனை உண்டோ அத்தனையையும் அவ ரநுசரணையின் பேரில் ஒன்றொழியாமல் நிறைவேற்றி வைப்பவள் அவள். இந்த உலகுபோல் சகல உலகமும் அவள் பரி பாலனத்தில். இந்த நேமி முழுதும் அவ ளாட்சி;- பாரதியார் பாடல். இங்கே உயிர்கள் வாழுதற்குத் தநு கரண புவன போகங்கள் வேணடும். அநுபவம் பெறுதற்கு அந்தக் கரணங்கள் வேண்டும். கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் புலன்கள் வேண்டும். அவ்வவற்றுக்கான விஷயங்கள் வேண்டும். இராமலிங்கசுவாமிகள் சொல்கிறது போல், ''மதிவேண்டும், நிதிவேண்டும், நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்'' இந்தலோகத்துக்குப் போல் அந்த லோகத்துக்கும் அவையெல்லாம் வேண்டும்.

இந்தச் சக்திக்கு ஆணை என்றும் பெயர். உலகுயிர்களுக்கு இது உபகரித்து நிற்கும் நிலையைப் பார்த்து நயந்து, அருக்கனென நிற்கும் அருள் என்றார் உமாபதி சிவாச்சாரியார். சூரியன் இச் சக்தி கொடுக்கும் ஆற்றலால் நாம் காணத்தக்கதாக உலகில் பயிர் உற்பத்திகளைப் பெருக்குகிறது. அதுமட்டுமன்றி அவை உணவாகும் விஷயத்திலும் உடன் நின்றுதவுகிறது. உஷ்ணமில்லாமல் உணவு சமைபடமாட்டா தென்பது மட்டுமல்ல, வயிற்றிற் சமிபடவும் மாட்டாது. உணவை உள்வாங்கும் உறுப்புக்களில் உஷ்ணம் இல்லாதபோது உண்ணுதலே நிகழாது. இந்த அருள் இல்லாமல் உயிர்களுக்கு அநுபவவிஷயமும் அனுபவித்தலுமில்லை. உலகாநுபவ நிலைக்குத் தான் - உலகாநுபவங் கடந்த சிவாநுபவ நிலைக்குந்தான் - அவளை விலகி வழிபோக இயலாது. தேவர்க்குஞ் சரி அது இயலாது. மனிதர் சிவத்துவம் பெறில் செபம், தவம், தியானம் செய்ய வேண்டும். யோகவிதிப்படி பிராணாயாமஞ் செய்து குண்டலினியை எழுப்பி விட்டாலும் அதில் சக்தியின் உபகாரம் விசேட சாந்நித்தியம் இல்லாமல் தியானம் யோகம் கைகூடா. சிவனது பிரதிமூர்த்தங்களாய் நின்றுதவுவனவாகப் போற்றப்படும் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்ற ஐவருக்கும் உடலாய் நிற்பதும் உயிராய் நிற்பதும் அவளே. அவளில்லாமல் உயிர் ஊர் புகுந்த பாடில்லை என்கிறார் திருமூலர். ஊர் வீட்டுலகம், முத்தியுலகம், ஆன்மா சிவனைச் சாரும் உலகம். என்றால் இந்தச் சக்தியின் மகிமை இருந்தவாறென்! திருமூலர் வாக்கில் ஒரு செய்யுள்.

அவளை அறியா அமரரு மில்லை<br>
அவளின்றிச் செய்யும் அருந்தவ மில்லை<br>
அவளின்றி ஐவரா லாவதொன் றில்லை<br>
அவளின்றி ஊர்புகு மாறறி யேனே.

நிலைமை இதுவாகலின் அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம் என்ற உண்மைக்கு அசைவில்லை என்க.

---

## காப்பி, தேநீர், வாழைச்சார் போன்ற கறை போக

துணியில் கறைபட்ட இடத்தில் கொஞ்சம் சீமைச் சுண்ணாம்பைப் பூசி, சற்று நேரம் காற்றில் ஊறவைத்துப் பிறகு அதைச் சுத்தமான தண்ணீரில் கசக்கித் தோய்க்க எப்படிப்பட்ட காப்பிக்கறையாயினும் வாழைக்கறையாயினும் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை இழந்து செல்லாதீர்கள், உங்கள் பண்பாடு மிக உயர்ந்தது. அதனை இழந்து விட்டால் நீங்கள் தமிழராகச் செல்ல முடியாது என்ற கருத்தை வைத்து அழகாகப் பேசினார். அடியேனும் அவரது கருத்தை அநுவதித்துச் சில கருத்துகளைக் கூறினேன்.

அடியேனுடைய பேச்சில் சில இடங்களில் ஊமைத் தமிழரையும், செவிட்டுத் தமிழரையும் சந்திக்க நேர்ந்தது என்று அதற்கு விளக்கமும் கூறினேன். அதாவது, வாய்பேசாதவன் ஊமை. தமிழனாகப் பிறந்து தமிழ் பேசமாட்டாதவன் ஊமைத் தமிழன். காது கேளாதவன் செவிடன். தமிழனாகப் பிறந்து காதினால் தமிழ் மொழியைக் கேட்டு விளங்கிக் கொள்ள முடியாதவன் செவிட்டுத் தமிழன் என்று கூறினேன். இக்கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகக் கரகோஷம் செய்தார்கள். சுவிஸ் சுதேசியும் கருத்தை விளங்கிக் கொண்டு கரகோஷம் செய்து மகிழ்ந்தார். எங்கள் பண்பாடு மிக உயர்ந்தது என்பதற்கும் சுவிஸ் மக்கள் அதனை மேம்படுத்துகிறார்கள் என்பதற்கும் எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

ஜெனீவா சிறிய மாவட்டம். ஆனாலும் அங்கேதான் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் சபை போன்ற பல சர்வதேச அமைப்புகளும் இருத்தலினால் உலகப் பிரசித்திபெற்ற நகரமாகத் திகழ்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு யாழ்ப்பாண நகரம் தலைநகராய் அமைந்ததுபோல் ஜெனீவா மாவட்டத்திற்கும் ஜெனீவா நகரமே தலைநகராய் அமைந்தது. இங்குள்ள மக்கள் அனைவரிடமும் அன்பாகப் பழகும் பண்புள்ளவர்கள். ஜெனீவா உலக கடிகாரத் தொழிலிலும் மிகச் சிறப்புடையதாக விளங்குகின்றது.

சுவிசிலுள்ள சுதேசிகளில் இளைய தலைமுறையினருக்குச் சமயவாழ்க்கையைப் பற்றிய அக்கறையே கிடையாது. அறுபது வயதைத் தாண்டியவர்கள்தான் கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச் செல்கின்றனர். தேவாலயங்கள் மிகப்பெரியனவாகக் காட்சி அளிக்கின்றன. ஆனால் அங்கு ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுங் கூட்டமோ மிகக் குறைவெனறே கூறவேண்டும். இளைஞர் சமுதாயம் வேறொரு போக்கில் போய்க்கொண்டிருக்கிறது. காதலர்கள் ஒருவரை ஒருவர் முதன் முதலில் சந்திக்கும் போது கேட்கும் முதலாவது கேள்வி நீங்கள் கடவுளை நம்புகிறீர்களா? என்பது. இல்லை என்று சொன்னால் தான் காதல் வளரும். இல்லையேல் காதல் முதலாவது கேள்வியிலேயே கருகிவிடும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பதுதான் இளைஞர் சமுதாயத்தின் வாழ்க்கையாகக் காணப்படுகின்றது.

ஆனால் தமிழ் இளைஞரில் ஒரு சிலர் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தமது சமயத்தையும் அறியார். கிறிஸ்து சமயத்தையும் அறியார். அறிவிலே ஏழைகளையும் பணத்திலே ஏழைகளையும் தேடிச் செல்கின்றனர். ஒருநாள் அடியேன் தங்கியிருந்த இல்லத்திற்கு இரு இளைஞர்கள் வந்தனர். வீட்டுத் தலைவனுக்கு உபதேசம் செய்யத் தொடங்கினர். அவரோயார் எதைக் கூறினாலும் சிரித்த முகத்தோடு கேட்டுக்கொண்டிருப்பார். முடிவில் போய் வாருங்கள் என்று மாத்திரம் சொல்லி அனுப்புவார்.

வந்தவர்களில் ஒருவர் தனது உபதேசத்தைக் கூறத் தொடங்கினார். இயேசு பெருமான் வருகிற காலம் சமீபித்துவிட்டது. அவருடைய கல்லறை இன்றும் திறந்தே கிடக்கிறது. அவருடைய வருகைக்காக நாம் எல்லோரும் கிறிஸ்துநாதரைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தமைந்த பேச்சை நிகழ்த்தினார். அவரது பேச்சு முடிந்ததும் 1994ஆம் ஆண்டுகளுக்கு முன்பு எம்மை யார் காப்பாற்றினார்? என்று அடியேன் கேட்டேன். அவர்களால் பதில் கூற முடியவில்லை. நீங்களும் ஒருநாளைக்கு விபூதி பூசுகிறீர்கள்தானே என்றேன். ஓம் என்று ஒப்புக் கொண்டார்கள். அப்படியானால் வருடத்தில் ஒரு நாளைக்கு மாத்திரம் விபூதி பூசுகிறவர்கள் சிறந்தவர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் ஒன்றுக்கு ஐந்துமுறை வீதம் வருடம் முழு நாளும் பூசுகிறவர்கள் சிறந்தவர்களா? என்றேன். அவர்களால் பதில் கூறமுடிய வில்லை. அவர்களில் ஒருவர் அடியேனைச் சுட்டிக்காட்டி இவரைக் கொஞ்சம் பேசாமல் இருக்கச் சொல்லுங்கள் என்றார். உடனே வீட்டுத்தலைவி, அவர் எங்களை வளர்த்த பெரியப்பா. அவர் நல்லதைத்தானே சொல்லுகிறார். அவரைப் பேசாமலிருக்கச் சொல்லுவதற்கு நீங்கள் யார்? என்று தொடங்கினார். வீட்டுத்தலைவர் ஒரு புன்முறுவல் பூத்தார். அவர்கள் இருவரும் வேறு பேச்சின்றி இடத்தை விட்டு அகன்றனர்.

---

# இம்சை

ஓ தெய்வமே, உலகிலே உள்ள எல்லா ஜீவராசிகளையும் நேசிக்க எனக்கு வல்லமையைத் தந்தருளுக! அதே போன்று அவைகளும் என்னை நேசிப்பதாகுக! (யசுர் வேதம்)

★ ★ ★

ஊன் உணவை எவன் தவிர்த்துத் தாவர உணவை உண்கின்றானோ அவன் நீடுழி காலம் புகழுடன் வாழ்வான் (இருக்கு வேதம்)

★ ★ ★

ஒரு உயிரையும் கொல்லாத இல்லறத்தானுக்குச் சகல நலனும் பெருகும். (இருக்கு வேதம்)

★ ★ ★

புத்தசமயம் ஊன் உண்பதனைத் தடைசெய்யவில்லை. பல்லாயிரக்கணக்கான உயிர்களும் மீன் வகைகளும் இரையாகின்றன, பன்றி இறைச்சியைப் புத்தரே விரும்பி உண்டார் என்று கூறப்படுகின்றது (புத்த தர்ம. ப. 71). இவ்வாறிருந்தும் ஒரு இந்திய தத்துவஞானி என்ன கூறுகின்றார்? "உயிர்களிடம் அன்பு செலுத்தும் பண்பினை நாம் புத்தபிரானிடமிருந்தே பெற்றுள்ளோம் என்பதாகும் - இக்கூற்று எதற்கு நிகராகுமெனின் கூறுதும். சூரியபகவான் தனது வெளிச்சத்தை மின்மினிப் புழுவிடமிருந்து பெற்றதைப் போன்றதாகும்.

★ ★ ★

திருவள்ளுவப் பெருந்தகை கூறுவது யாது? தனது உடம்பை வளர்ப்பதற்குப் பிறிதொரு உயிரை வதைத்து அதனுடைய ஊனை உண்பவனிடம் இருந்து - இரக்கம், அன்பு போன்ற அம்சங்கள் எவ்வாறு தோன்றும்?

சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் எழுதிய நூலிலிருந்து
உதவியவர்: ம. சி. சிதம்பரப்பிள்ளை
25.12.94.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களும் இறை வழிபாடும்

R. கந்தையா, *B. A.*,
" அன்பகம் ", கொக்குவில்.

சிந்து நதிக் கரைகளில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தை 'இந்துக்கள்' என்றும், அவர்களுடைய தேசத்தை 'இந்தியா' என்றும், கிரேக்கர்கள் அழைத்ததாகச் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். பொதுவாக, ஐரோப்பியரால் 'இந்தியர்' எனக் கூறப்படும் பிரதேசம் இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள நாடு எனவும், இங்கு வாழும் மக்கள் 'இந்தியர்கள்' என்றும் அவர்களுடைய சமயத்தை இந்துசமயம் எனவும் அழைப்பதுண்டு. உண்மையில் இந்தப் பெரிய நிலப்பரப்பு 'பாரத பூமி, பாரத நாடு' என மிகப் பரந்தும் மறைந்த குமரிக்கண்டத்தையும் உள்ளடக்கிய ஒரு 'புண்ணிய பூமி' என இந்தியர்கள் கருதுகின்றனர். இவர்களுடைய வாழ்க்கை முறையை ''சனாதன தர்மம்'' என்றும் கூறுவர். மனித இனம் ஒழுங்காக வாழத் தொடங்கிய அக்காலங்களிலிருந்து, அநுசரித்த வாழ்க்கை முறையைத்தான் இங்ஙனம் கூறிவந்துள்ளார்கள். 'தர்மம்' என்ற சொல், அறம், நல்லொழுக்கம், கடமை, நீதி, புண்ணியம் என்ற பல பொருள்களுடன், மனிதன் இறைவனுக்கும், சனசமூகத்துக்கும், தமக்கும், ஏன் எல்லாச் சீவராசிகளுக்கும் செய்யும் கடமைகளையும் குறிக்கும். 'சனாதன தர்மம்' பாரத மக்களின் பண்பாடாகவும், சமய நெறியாகவும் பல யுகங்களாக வளர்ந்ததெனலாம்.

பாரத நாட்டில் கிருத, திரேத, துவாபர, கலியுக – காலங்களையும், அவை அடுத்த பிரளய காலங்களையும் குறிப்பிட்ட பல கதைகள் நிலவுகின்றன. ஒவ்வொரு யுகங்களிலும் நடந்த புராணக் கதைகளும் ஏராளமாகும். இமயமலையிலிருந்து கன்னியாகுமரிவரையுமுள்ள ஒவ்வொரு மலையும் ஆறும், ஊரும், இடமும் இந்தப் புண்ணிய பூமியின் கதைகளைக் கூறும். புண்ணிய சீலர்கள் வாழ்ந்த இடங்களாகவும் புராணக் கதைகள் நடந்த பூமியாகவும் மனித வடிவில் மகான்களாகவும் முனிவர்கள் ரிஷிகளாகவும் ஆதார புருஷர்களாகவும் வாழ்ந்து தர்மம் வளர்த்த சான்றுகள் கதைகள் இந்தியா எங்கும் இருக்கக் காணலாம். பலமொழிகள், பல வித பழக்கவழக்கங்கள், பல சாதிகள் நிரம்பிய இந்தப் பாரத நாட்டில், இறைவன் பெயரில் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்ந்துள்ளனர். பல பெயர்கள் கூறிக் கடவுளை வணங்கினாலும் 'ஒன்றே கடவுள்' என்றனர். '' சனாதன தர்மம் '' என்ற சொல் இந்துக்களைக் குறிப்பதுடன் நிற்கவில்லை. அவர்களுடைய வழிபாட்டு முறைகளையும் இறை நம்பிக்கைகளையும் சமயக் கோட்பாடுகளையும் நன்கு பிரதிபலித்தன. இந்தியாவிலுள்ள பல மொழிகளிலும் பல விஷயங்கள் கூறப்பட்டாலும் சமஸ்கிருத மொழியிலும், தமிழிலும் இந்துக்களுடைய இறை வழிபாட்டின் சிறப்புக்களை இன்றும் காணலாம். 'ஏகம் சத். விப்ராபகுதாச தந்தி' என ஒன்று கூறினால், ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என மற்றது கூறுகிறதைப் பார்க்கிறோம். இந்துக்களுடைய தெய்வங்கள் எனப் பல பேசப்பட்டாலும் " இறைவன் ஒன்று '' என்பதை எல்லாவித நூல்களும் வற்புறுத்துகின்றன. கால, தேச, பழக்கவழக்கங்களால் வந்த ஆயிரம் ஆயிரம் பெயர்களையும், ஒவ்வொரு தெய்வத்துக்கும் கூறி, இன்றும் '' சகஸ்ரநாம '' அருச்சனைகள் நடைபெறுவதைக் காண்கின்றோம். சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், குமாரம், சௌரம் என பேசினாலும் எல்லா வழிபாடுகளும் ஒரு இறைவனுக்கு என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இறைவழிபாடுகளும் பல விதங்களாகப் அமைந்துள்ளன ஆயின் எல்லாம் ஒரு இலக்கைக் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்துக்களுடைய வழிபாட்டு முறை ஏனைய சமயங்களைப் போல, ஒரு தன்மைத்தாக இருப்பதில்லை எனச் சிலர் கூறுவதைக் கேட்கிறோம். இறைவனை வழிபடுவதில் இந்துக்கள் பல முறைகளைக் கையாளுவதுதான் நல்லது என இன்றும் இந்துக்கள் நம்புகின்றனர். அவரவர் உடலமைப்பு, வயது, வசதி என்பவற்றுக் கேற்ப உணவு எடுப்பதுபோல, அவரவர் மனம், அறிவு, உடல், உயிர் வளர்ச்சிக்கு ஏற்ற வழிபாட்டு முறைகளை எம் முன்னோர் வகுத்துள்ளனர். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும், பக்தி, கரும, ஞான, யோகங்கள் எனவும், சகமார்க்கம், தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம் எனவும், இன்னும் பல வழிகள் கையாளப்படுவதைக் காண்கிறோம். பொதுமக்கள் ஒரு மார்க்கமும் இல்லாமல் வெறுமனே கோயில் போயும் வருவதுண்டு. வழிபாட்டு முறைகளைச் சீராக்கச் சாதாரண மக்களுக்கு உதவக் கோயில்களும், பாடசாலைகளும், சமயஸ்தாபனங்களும் முயலுவது நல்லது. அப்பொழுது இறைவழிபாடு நல்ல பயனளிக்கும். டாக்டர் S. ராதாகிருஷ்ணன் கூறுவது போல இந்துசமயச் சிந்தனைகளும், நடைமுறைகளும் மீள நன்கு ஒழுங்குபடுத்தி அமைத்தல் மக்கள் நல்வாழ்வுக்குத் துணையாகும்.

---

# மறதி

ஆண்டவனால் எமக்கு வழங்கப்பட்ட குணங்களில் மூன்னிற்பது மறதி.

இந்த மறதி மூலம் பல நன்மைகளையும் சில தீமைகளையும் அடையலாம். சென்ற ஆண்டு நடைபெற்ற துன்ப நிகழ்ச்சி ஒன்று இன்றுவரை மனதை விட்டு மறையாது போனால் உன்னால் இற்றைவரை வாழமுடியுமா? உன் காதலினால் அடைந்த தோல்வியை மறக்காது விட்டால், உன் அருமைக் குழந்தை பறிபோனதை நினைத்துக்கொண்டால் மேற்கொண்டும் குழந்தையில் அன்பு செலுத்தலாமா? உன் நண்பனொருவன் செய்த துரோகத்தை நீ மறக்காது இருந்தால் அவனை நீ மன்னிக்க முடியுமா?

மறப்பதென்பது மிகவும் கஷ்டமானதும் துன்பப்படுத்துவதும்தான். இருந்தும் இங்கு நீ வாழவேண்டுமானால் மறந்துதான் தீரவேண்டியுள்ளது.

மறப்பது என்பது சிறந்த ஞானிகளால்தான் முடியும். ஆகையால் நீயும் உன்னைத் தயார்படுத்திக்கொள்.

நான் இற்றைவரை சொன்ன மறதியால் நீ துன்பமில்லாது வாழலாம். மறதியையும் மறந்துவிடு இங்கே.

உன்னை உயிர்ப்பித்த இறைவனை ஈன்றெடுத்த, அன்னையை, அறிவூட்டிய ஆசிரியனை,

மறப்பதால் வரும் மனவேதனையைக் குறைப்பதற்கு ஒரே ஒரு வழி,

ஒவ்வொன்றையும் நினை. ஆனால் அந்த ஒன்றுக்கு நீ அடிமையாகாதே!

— திரு. ச. வடிவேலு அவர்கள் எழுதிய 60-ல் அறுபது என்ற நூலிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கனடாவில் சைவ சமயம்

கவிஞர் வி. கந்தவனம்

சைவ சமயம் சிவபெருமானை முழு முதற் கடவுளாகப் போற்றுவது, விஷ்ணு பெருமானை மையமாகக் கொண்ட வைண வம் இந்தியாவின் வடபகுதிகளில் வேரூன்ற, சைவ சமயம் தென்பகுதிகளில் வளரலா யிற்று. 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று மணிவாசகர் பாடியதும் இக்கருத் துப் பற்றியேயாம். எனின், வடநாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்களும் தென்னாட் டில் வைணவ தலங்களும் இல்லாமல் இல்லை. சங்க காலத்தில் மாயோன் தமிழர் களின் முல்லைநிலக் கடவுளாகப் போற றப்பட்டவன் என்பதைக் கவனத்தில் கொள் ளுதல் வேண்டும்.[1]

ஈழத் தமிழர்களின் சமயம் சைவ சமயமேயாகும். ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து சைவ சமயத்தவர்களுக்கு ஏற் பட்ட இன்னல்களைக் களைந்து, மேன்மை கொள் சைவ நீதியை ஈழத்தில் நிலை நாட்டிய பெருமை ஆறுமுகநாவலர் (1822–79) பெருமானுக்கு உரியது. அவரைத் தொடர்ந்து அவரது மாணவ பரம்பரை மேற்கொண்ட தொண்டுகளின் விளைவாகச் சைவ சமயம் தொடர்ந்து ஈழ நாட்டில் வளரலாயிற்று.

சைவத் தமிழர்கள் குடியேறிய பிற நாடுகளிலும் சைவமும் சைவ பாரம்பரியங் களும் வளர்ந்தோங்கி வருவது கண்கூடு. சிங்கப்பூர், மலேசியா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளிற் சைவ சமயம் நன்கு நிலைகொண்டுவிட்டது. அமெரிக்கா, இங்கி லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழ்ந்து வரும் சைவத் தமிழர்களும் தமது சமயத்தைப் பேணிவருகின்றனர்.

கனடாவிலும் சைவ சமயத்தவர் பெருந்தொகையில் புலம்பெயர்ந்தும் குடி யேறியும் வாழத் தொடங்கியதன் விளை வாகச் சைவ சமயம் தழைக்கலாயிற்று. 1983-ம் ஆண்டளவில் ஏறத்தாழ 5000 தமிழ் மக்களே கனடாவில் இருந்தனர். 1983-ம் ஆண்டு யூலாய் மாதம் இலங்கை யில் நடந்த இனக் கலவரத்தைத் தொடர்ந்து, இலங்கைத் தமிழ் மக்கள் அதிக அளவில் கனடாவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். இன்று கனடா முழுவ திலும் 70,000 இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றார்கள். அவர்களுள் ஒன்ரா றியோ மாகாணத்தில் மட்டும் 50,000 பேர் உள்ளனர்.[2] இங்கு வாழ்ந்துவரும் இலங் கைத் தமிழர்களிற் பெரும்பான்மையோர் சைவ சமயத்தவர். தமிழ் நாட்டவரையும் சேர்த்துச் சைவ மக்களின் சரியான தொகைக் கணக்கெடுப்பு ஒன்று இன்னமும் நடத்தப்படவில்லை.

## ஒன்ராறியோ மாகாணம்

ஒன்ராறியோவில் படிப்படியாக அதி கரித்துவந்த சைவ மக்களின் ஆன்மீக தேவை களை நிறைவு செய்தற்பொருட்டும் சைவ அறிவைப் பரப்புதற் பொருட்டும் திருவா ளர்கள் R. வெங்கட்ராமன், K. S. சக்தி, N. சிவலிங்கம், கோடீஸ்வரன், கலாநிதி சண்முகதாஸ் ஆகியோரின் நன்முயற்சியால் 1980 ஆம் ஆண்டு 'கனடா இந்து ஆலய சபை' உருவாக்கப்பட்டது.[3] கனடாவில் சைவசமய வளர்ச்சி இச்சபையின் தோற்றத் துடனேயே ஆரம்பமாகியது என்பது கவனிக் கத் தக்கது. இச்சபையின் அயராத உழைப் பினால் 1984 ஆம் ஆண்டு ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள இரிச்மண் மலையில் கணேசர் ஆலயம் ஒன்றினை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, இன்று விநாயகப் பெருமானுடன் முருகமூர்த்தியும் விஷ்ணு பெருமானும் வீற்றிருக்கும் பெருங் கோயிலாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின் றது. கோயில் ஆகம முறையிற் கட்டப் படாதவிடத்தும் அடியவர்களுக்குத் தெய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுக்கிரகம் கைகூடும் வகையில் நியம பூசைகளும் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

கந்தப் பெருமானுக்குத் தனியான ஓர் ஆலயமும் தற்காலிகமான முறையில் ஒன்ராறியோ மாகாணத்தில், ஸ்கரபரோவில் உள்ள 3251, கெனடித் தெருவருகில் 17-05-1991 இல் ஆரம்பிக்கப்பட்டு, வேதாகம முறைப்படி இயங்கி வருகின்றது. கனடா கந்தசுவாமி ஆலயம் என்பது இதன் பெயர். இங்கும் அபிடேக ஆராதனைகளும் பூசைகளும் ஒழுங்காக நடத்தப்படுவதோடு, பிரதான விரதங்களும் உற்சவங்களும் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றன. இக்கோயிலை ஸ்காபரோவிலேயே சுமார் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் போக்குவரத்து வசதிகளுடன் கூடிய பகுதி ஒன்றில் நிரந்தரமாக நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கனடா கந்தசுவாமி ஆலய நிர்வாக சபை கவனித்து வருகின்றது.

1992 ஆம் ஆண்டுமுதல் 2691, மார்க்கம் தெரு, முதலாம் பிரிவு, ஸ்காபரோ, ஒன்ராறியோ என்னும் இடத்தில் அன்னை ஸ்ரீ துர்க்காதேவி வழிபாடும் சிவஸ்ரீ தியாகராஜ கணேஷ் சுவாமிகளின் முயற்சியால் தொடங்கப்பெற்றது. இங்கும் தற்காலிகமாகவே விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றது. எனினும், ஸ்ரீ துர்க்கா தேவி அம்பாளுக்கு நிரந்தர கோயில் ஒன்று அமைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நோர்த் யோக்கில் இதற்காகக் காணி வாங்கப்பட்டுள்ள செய்தியும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதே முகவரியில் ஐந்தாம் பிரிவில் ஜய துர்க்கா இந்து சபையால் நிர்வகிக்கப்பட்டு வரும் ஜய துர்க்கா ஆலயம் ஒன்றும் உள்ளது. வட இந்திய இந்துக்களால் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட இவ்வாலயத்துக்கு அதிக இலங்கைத் தமிழர்களும் வழிபடச் செல்வதால், இலங்கைக் குருக்கள் ஒருவரும் மேலதிக பூசகராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். ஜய துர்க்கா இந்து சபையின் நடப்புவருட இயக்குநர்களின் தலைவராக திரு. சனான் இராம் வேர்மா அவர்களும் நிர்வாக சபைத் தலைவராக திரு. வாஜ்பாத் ராய் கோகுனா அவர்களும் பணியாற்றுகின்றனர். ஸ்காபரோவை அடுத்து ஒன்ராறியோவில் தமிழர்கள் அதிகம் வாழுகின்ற நகரமாக மிசிசாகா விளங்குகின்றது. எனினும் இங்குள்ள சைவ மக்களுக்கெனக் கோயில் ஒன்றும் இல்லை. இந்தக் குறைபாட்டைப் போக்கும் நோக்குடன் இங்குள்ள சைவப் பெரியார்கள் 22-05-1992 இல் 'மிசிசாகா இந்து மகா சபை' என்னும் அமைப்பை உருவாக்கி அதன்மூலம் மிசிசாகாவில் சைவ சமயத்தை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள். சபையின் முதல் நடவடிக்கையாக 'ஜய துர்க்கா தேவஸ்தானம்' என்ற பெயரில் மிசிசாகாவில் கோயில் ஒன்றைக் கட்டவேண்டுமெனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டிலிருந்து விக்கிரகங்கள் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இத்தீர்மானம் செயலுருப் பெறத் தொடங்கியிருக்கிறது. இச்சபையின் தலைவராக திரு. செல்லையா அச்சுதம் பிள்ளையும், செயலாளர் திரு. பெருமாள் பிள்ளை சிறீகாந்தனும், பொருளாளராக திரு. சின்னத்துரை மகேந்திரநாதனும் பணிபுரிகின்றனர்.[4]

ரொறன்ரோவில் ஐயப்பசுவாமி அடியார்கள் தொகையும் அதிகரித்து வருகின்றது. ஐயப்ப சுவாமி வழிபாட்டை ரொறன்ரோவில் ஆரம்பித்து வைத்த பெருமை ஸ்ரீ கரிகரன் ஐயர் அவர்களைச் சாரும். அவரது இல்லத்தில் ஐயப்ப சுவாமி வழிபாடு 14-01-1991 இல் தொடங்கப்பட்டது. இதே தினத்தில் ஒன்ராறியோ ஐயப்ப சுவாமி சமாஜம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக திரு. முகுந்தன் மேனன் அவர்களும் உபதலைவராக ஸ்ரீ கரிகரன் ஐயர் அவர்களும் தொண்டாற்றுகின்றனர்.

14-04-1994 முதல் ஐயப்ப சுவாமி வழிபாடு ஸ்காபரோவில் 2691, மார்க்கம் தெருவில் உள்ள 14ஆம் பிரிவுக் கட்டிடத்தில் நடைபெற்று வருகின்றது. அத்துடன் ஸ்காபரோ வோபேண் கல்லூரி மண்டபத்தில் 102ஆம் இலக்க அறையில் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிற்றுக்கிழமையும் காலை பத்து மணி முதல் பகல் ஒரு மணிவரை ஐயப்ப சுவாமிக்குப் பூசையும் பஜனையும் நடத்தப் பட்டு வருகின்றன. இவற்றையும் ஐயப்ப சுவாமி சமாஜத்தினரே ஒழுங்கு செய்கின் றனர். இவர்கள் ஐயப்ப சுவாமிக்குக் கோயில் கட்டுதற்கும் திட்டமிட்டுவருகின் றார்கள்.

ஒட்டாவாவில் கார்ல்டன் என்னும் இடத்தில் வட இந்திய மக்களால் 1978இல் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் படிப்படியாகக் கட்டிமுடிக்கப்பட்ட இந்துக் கோயில் ஒன்று உள்ளது. வைணவம் போற்றும் தெய்வங்க ளுடன் விநாயகர், சிவன் முதலாய மூர்த்தி களும் இங்கு பிரதிட்டை செய்யப்பட்டிருக் கின்றன. ஒட்டாவாவில் வாழும் சைவத் தமிழர்களும் இக்கோயிலிலேயே வழிபாடு களை நிகழ்த்தி வருகின்றனர்.

## கியூபெக் மாகாணம்

மொன்றியேல் வாழ் தமிழ்ச் சைவ மக்கள் பலர் 1984 ஆம் ஆண்டு ஸ்ரீ ரங்க நாதையர் அவர்கள் தலைமையிற் கூடி அங் குள்ள ஹரே ராமா ஹரே கிருஷ்ணா ஆலயத்தில் தமது பஜனை வழிபாடுகளை ஆரம்பித்தனர். பின்னர் பல வசதிகளை முன்னிட்டு இந்து மிசன் மண்டபத்துக்குத் தம் வழிபாடுகளை மாற்றிக் கொண்டனர். ஸ்ரீ ரங்கநாதையருடன் திருவாளர்கள் இராசரத்தினம், கனகலிங்கம் ஆகிய சைவப் பெரியார்களும் சேர்ந்து திருமுருகனுக்கு ஓர் ஆலயம் அமைக்கும் நோக்குடன் உரு வாக்கிய அறங்காவலற் குழு 1985ஆம் ஆண்டு ஆனி மாதம் கியூபெக் சைவ மகா சபையாக மாற்றம் பெற்றது.[5] இன்று பல சைவ அடியார்களின் ஆதரவுடன் முருக னுக்கு மொன்றியேலில் ஒரு கோயிலை அமைப்பதற்கு இச் சபை முயற்சி எடுத்து வருகின்றது. இதற்கான ஆரம்ப பூசைகள் கடந்த ஆண்டு வைகாசி விசாக தினத் தன்று (02-06-1993) நடைபெற்றன.

மொன்றியேலில் உள்ள 7290, ஹச்சிசன் வீதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள துர்க்காதேவி ஆலயம் ஒன்று வழிபாட்டை வளர்த்து வருகின்றது. திரு. என். ஜகன் அவர்களின் தலைமையில் இயங்கிவரும் இதன் நிர்வாக சபை நிரந்தரமான அம்மன் கோயில் ஒன்றைக் கட்டும் பணியில் இப் பொழுது ஈடுபட்டுவருகின்றது.

மொன்றியேல் மாநகருக்கு வடக்கே, லொரன்சியன் மலைத்தொடரில் உள்ள வால்மொறீன் என்னும் இடத்தில் இமாலய ஜோதி சிவானந்த மஹரிஷியின் சிரேட்ட சீடர்களில் ஒருவரான சுவாமி விஷ்ணு தேவானந்தர் அமைத்துள்ள ஆச்சிரமத்தில் கடந்த ஆண்டு (11-07-1993) கந்தசுவாமி யினதும் ஐயப்பசுவாமியினதும் விக்கிரகங்கள் பிரதிட்டை செய்து வைக்கப்பட்டன. மேலைக் கதிர்காமம் என்று இத்தலத்துக் குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆலய நிர்மாண வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. ஆலயத்தைச் சுற்றியுள்ள காட்டைத் திருத்தித் தேரோடும் வீதி அமைக்கவும் மலையடிவாரத்திலிருந்து ஆலயத்துக்கு 108 படிகள் கட்டவும் குளிர் காலத்தில் ஆல யத்திற்குச் செல்ல மின்கம்பித் தூக்கு வண்டி ஒழுங்குகள் செய்யவும் திட்டமிடப் பட்டிருக்கின்றது.[6]

## அல்பேட்டா மாகாணம்

அல்பேட்டா மாகாணத்தின் தலைநக ரான எட்மண்டனில் அல்பேட்டா மகா கணபதி சங்கம் ஒன்று 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம், எட்மண்டன் நகரத்தில் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானுக்கு ஆலயம் ஒன்றை அமைப்பதேயாகும். இத்தெய்வப் பணிக்கு வித்திட்டவர் ஹவாயில் உள்ள உலக இந்து அறநிலையக் காவலரும் ஈழத்து யோகர் சுவாமிகளின் சீடருமாகிய அமெரிக்கர் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனியசுவா மிகள் ஆவர். இவர் தமது கனடியச் சீடர்களாகிய அரன்வேலர், வேலன் என் பாரிடம் விநாயகர் விக்கிரகம் ஒன்றைக் கொடுத்து, கனடாவில் விநாயகருக்கு ஓர் ஆலயத்தை அமைக்குமாறு பணித்தார்.[7]

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவக்கிரகம் பற்றி ஓர் ஆய்வு

# சூரியன்

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

சூரிய உபாசனைக்கு கிழமைகளில் ஞாயிற்றுக்கிழமையும், திதியில் சப்தமியும் நல்ல வேளைகளாகும். சூரியனுக்குரிய பண்டிகைகளில் மகர, மேட சங்கிராந்திப் பொங்கலும், ரதஸப்தமியும் விசேஷமானது. தமிழ்நூல்களில் சூரிய வழிபாட்டைக் குறித்துப் பல செய்திகளுண்டு. தொல்காப்பிய உரையில் பேராசிரியர் சூரியனது துதிகளில் "உலகெலாம் படைத்த பிரமன் முதலான தேவர்களை வெளியாக்கியவன் நீயேயாதலின், பருதியின் செல்வனே நின் திருவுள்ளத்தில் உள்ள அருள், எங்களிடமிருந்து நீங்காமல் இருக்கட்டும்" என்றதனை :

"அண்டங்கள் பல பயந்த அயன் முதலாம் இமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்தக் கொள்—கையை ஆகலின்
ஓங்குயர் பருதியுஞ் செல்வ, நின்
நீங்கா உள்ளம் நீங்கன்-மார் எமக்கே"

என்றும்,

ஐம்பெரும் பூதங்களுக்கும் ஆதாரமானவனே என்பதனை,

"நீராகி நிலம் படைத்தனை; நெருப்பாகி நீர் பயந்தனை
ஊழியிற் காற்று எழுவினை; ஒளிகாட்டி வெளி காட்டினை"

என்றவாறுள்ளது.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்,

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேருவலந் திரிதலான்"

என்றும் வாழ்த்தி,

கண்ணகி மூலம்

"காய் கதிர் செல்வனே! கள்வனோ
என் கணவன்" என்று

சூரியனைக் கேட்க, சூரியதேவனே அசரீரியாக் விடை கூறுகிறார்:

"கள்வனோ அல்லன்; கருங்கயற்கண்-
ஒள்ளரி உண்ணுமிவ்வூர்" (மாதராய்

எனச் சூரிய உபாசனையின் மேன்மையை விளங்கவைக்கிறார்.

சூரியன் பாலைநிலத் தெய்வம் என்பதனை கலித்தொகையில் நச்சினார்க்கினியர் உரை செய்யும்போது, மழையையும் காற்றையும் தருகின்ற ஞாயிறு தெய்வமாயினமை அவரை வாழ்த்துவோம் என்றார்.

"கனைகதிர்க் கனலியைக் காமுறல் —
வளிதரும் செல்வனை வாழ்த்தவும்"
— (கலித்தொகை)

சூரியனது வெம்கதிர் முற்று முழுவதும் உலகில் சார்ந்தால் உயிர்களனைத்தும் அதனைத் தாங்கமாட்டாது அழியும். எனவே, கருணை கொண்ட அவிர்சடை முனிவர்கள் அந்த வெம்மையைத் தாங்குகிறார்கள். அதனாற்றான் இப்பூவுலகிற்கும் வெம்மை தாங்கிக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது. இந்த முனிவர்கள்தான் 'வாலகில்யர்' எனப்படுவர். கட்டைவிரல் பிரமாணத்தில் சூரியனது தேரிலிருந்து உலாவிவருவர். இவர்களது உணவு காற்றாகும். இவர்களைத்தான் 'விண்செலல் மரபின் ஐயர்' என்று திருமுருகாற்றுப்படையும், 'சுடரொடு திரிதரு முனிவர்' எனச் சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றன.

புறநானூறிலும், இம்முனிவர்கள் பேசப்படுகிறார்கள்,

"நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கி
கால்உண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும்"

சூரியனை உதயகன்னியாக வைத்துக் கம்பர் பாடியபோது சிவந்த வண்ணமுடைய உதய கன்னி நாற்புறமும் செம்பொன் — ஒளி பரப்பி வருவதைப் பார்க்கிறாளாம் இரவு நங்கை. பார்த்ததும் நாணி, பொறாமையோடு அங்கிருந்து விரைந்து செல்கிறாளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாணினாள் என ஏகினாள் - நளிர்
கங்குலாகிய நங்கையே" — என்றார்.

"ஒன்றென உலகிடை உலாவு மீமிசை
நின்று நின்று உயிர்தொறும் நெடிது
காக்குமே"

இவ்வாறெல்லாம் கம்பர் பல இடங்களில் சூரியதேவனது கீர்த்தியைப் பாடியுள்ளார். மகாகவி பாரதியார்,

காதல் கொண்டனை மேலும் மண்மீதே
கண்பிறழ்வின்றி நோக்குகின்றாயே
மாதர் பூமியும் நின்மிசைக் காதல்
மண்டினாள் இதில் ஐயமொன்றில்லை
சோதிகண்டு முகத்தில் இவளுக்கே
தோன்றுகின்ற புதுநகை என்னே
ஆதித் தாய் தந்தை நீவிர் - உமக்கே
ஆயிரம்தரம் அஞ்சலி செய்வேன் —
எனச் சூரியனை வணங்குகிறார்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில், உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு - பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு ஓவற இமைக்குஞ் சேண் விளங்கவிரொளி — என்றும்

கலிவெண்பாவில் குமரகுருபர சுவாமிகள்
பருதி பலவும் எழுந்து சுடர் பாலித்தாற்
போல குலவு மகரக் குழை,
இளம் பருதி நூறாயிரம் கோடிபோல
வளந் தரு
தெய்விக வடிவம் என்றும்
திருத்தக்கதேவர் சிந்தாமணியில்
"குழவியாய்ப் பிறந்த வெய்யோன்
குமரனாகி
முருகிப் பின்னர் விழைவுதீர் கிழவனாகி
விழுக்கதிர் வந்துவீழ" எனும் அடிகளால்

காலைக் கதிரவனைக் குழந்தையாகவும், நண்பகல் வெய்யோனைக் குமரனாகவும், மாலைச் சூரியனை முதியவனாகவும் போற்றியும் இப்படி இப்படியே ஆழ்வார்களும், கவிஞர்களும், நாயன்மார்களும் இன்னும் பலரும் ஆயிரம் ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே சூரியபகவானைப் போற்றிப் பேறடைந்த வரலாறுகள் ஏராளமுண்டு. இராமாயண காலத்திலிருந்தே சூரியனைக் குறித்து வழிபடும் "ஆதித்ய ஹிருதயம்" என்ற ஸ்தோத்திரம் இன்று வரை விரும்பிய பலனைத் தரும் சக்தி கொண்டதாகவே அமைந்திருக்கிறது. மகாபாரதத்தில் பகவத் கீதை எத்தகைய பெருமதி கொண்டதோ அதேபோன்று இராமாயணத்தில் "ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரம்" முக்கிய பங்கு வகிக்கிறது.

ஸ்ரீராமரும் இராவணனும் போர் புரிவதை அவதானிக்க மஹரிஷி அகஸ்தியர் தேவதைகளுடன் யுத்தபூமிக்கு வந்தபோது இராவணனை எவ்வாறு ஜெயிப்பது என்ற கவலையோடு ஸ்ரீராமன் இளைப்பாறிக் கொண்டிருப்பதைப் பார்த்து, யுத்தத்தில் இலகுவாக ஜெயிப்பதற்கான "ஆதித்திய ஹ்ருதய" ஸ்தோத்திரத்தை, சூரியனை நினைந்து பாராயணஞ் செய்து வணங்குமாறு பணித்தார். — ஸ்ரீராமரும் அவ்வாறு செய்தே ஜெயம் பெற்றார்.

சோதிடத்தில் சூரியன் மிகப் பிரதானமான கிரகமெனக் கணிக்கப்படுகிறது. சிங்கராசிக் கதிபதியாவார். மேட ராசியில் உச்சமும், இடப, மிதுன, கடக, கன்னி, விருச்சிக, மகர, கும்ப ராசிகளில் பகையாகவும், துலா ராசியில் நீசமும் பெறுகிறார். மீனம் தனு ராசியில் நட்புப் பெறுகிறார்.

அரசவம்சம். ஆண் கிரகம். சமஸ்கிருத மொழியுடையவர். மார்பு, இருதயஸ்தானங்களில் அங்கம் வகிப்பவர். வட்ட வடிவான ஆசனத்தில் வீற்றிருப்பவர். சூரியனுக்குச் சனி, சுக்கிரன், இராகு, கேது, சத்துருவாகவும், குரு, செவ்வாய், சந்திரன் மித்ருவாகவும், புதன் சமனாகவும் கொள்வர். சூரியதிசை ஆறு வருடங்கள் இடம்பெறும். சூரியன், மூன்றாம், பத்தாம் இடங்களை கால் பார்வையாலும், ஐந்து, ஒன்பதாமிடங்களை அரைப் பார்வையாலும், நான்காம், எட்டாமிடங்களை முக்கால் பார்வையாலும், ஏழாமிடத்தை முழுப் பார்வையாலும் நோக்குவார்.

இவ்வாறெல்லாம் சூரியதேவனது விபரங்களைப் பல்வேறு நூல்கள் எமக்குத் தந்துதவுகின்றன. பிரத்யக்ஷ தெய்வமென உலக மக்களனைவராலும் வணங்கப்படும் சூரிய பகவானை நாமும் தினமும் வணங்கிப் பயனடைவோமாக.

( தொடரும் – சந்திரகிரகமூர்த்தி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# திருத்தொண்டர் புராண வரலாறு

பண்டிதர், சைவப்புலவர் ச. சச்சிதானந்தசிவம்

பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத் துடைக்கின்ற எல்லையறு பரம்பொருளாகிய சிவபெருமானின் பொன் வண்ணத் திருமேனி போலப் பேரொளி வீசுவது இமய மலை. செம்மை நலம் பொலிந்து விளங்கும் அம்மலையின் தொடரிலே சிவபெருமானின் செம்பவளத் திருமேனியில் வெண்திருநீறு பரவப் பூசியிருப்பதுபோல் வெண்ணிற வொளி பரப்பிப் பொலிந்து விளங்குவது திருக்கைலை மலையாகும். அத்திருமலையில் அன்பருக்கன்றி வேறொருவருக்கும் காண்டற்கரியவராகிய கண்ணுதற் பெருமான், தமது திருவருட் சத்தியும் உலக மாதாவுமாகிய பார்வதிதேவியார் தமது இடப்பாகத்தில் மேவ கோடி உதயசூரியப் பேரொளி போலும் ஒளி வீசும் செம்பொற் கோயிலில் திவ்விய ஒளி வீசும் சிங்காசனத்தின் மேலே வீற்றிருந்தருளிப் பேரருளை வாரி வழங்குவார்.

அத் திருக்கைலாச மலைச் செம்பொற் கோயிலிலே பலகோடி பூதர்களுள் பலர் நானாவித வாத்தியங்களை முழங்குவர். வேறு பலர் வெண்சாமரம் வீசப் பலபூதர் ஆலவட்டம் அசைப்பர். தும்புரு நாரதர்களும், வித்தியாதரர்களும் இன்னிசை பாடுவர். கணநாதர்கள் கண்ணீர் பெருக, அழலிடைப்பட்ட வெண்ணெய் போல உள்ளம் கரைந்துருக, உரோமம் சிலிர்ப்பப் பேரானந்தப் பெருங்கடலுட்டிளைத்து ஆடிப் பாடுவர். முனிவர்கள் தங்கள் கரங்களைச் சிரங்குவித்து வேதசிரசுகளாகிய உபநிடதங்களை எடுத்தோதுவர். பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலிய பெருந் தேவர்கள் திருநந்திதேவருடைய வேத்திரப்படையினாலே பலமுறை விலக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும் அடிக்கப்பட்டும் ஆடையை ஒதுக்கி வாய்புதைத்து நின்று தத்தங் குறைகளைத் தன்னேரில்லாத் தலைவராகிய பரமபதியிடம் எடுத்துக் கூறுவர். தேவர்களும், முனிவர்களும், சிவகணநாதர்களும் நெருங்கிக் கூடிச் சிவபெருமானின் வற்றாத திருவருளை முற்றாகப் பெறுவதற்குக் காத்திருப்பார்கள். செம்மையேயாய சிவபதமளிக்கும் செல்வமாய செம்மேனிப் பெம்மான் அகிலாண்டகோடியீன்ற அம்மையோடமர்ந்திருந்து அருள்நிதி உதவுவர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அத் திருக்கைலாச மலையின் அடிவாரத்தில் வியாக்கிரபாத மகாமுனிவருடைய திருக்குமாரரும், சிதம்பரத்தில் சிவபெருமானால் வருவித்தருளிய திருப்பாற் கடலை உண்ட மெய்யடியாரும், கிருஷ்ணரைச் சிவதீக்ஷை செய்து தடுத்தாட் கொண்டருளிய சைவாசாரியருமாகிய உபமன்னிய மகாமுனிவர் எண்ணிக்கையில்லாத முனிவர் கூட்டம் சூழ எழுந்தருளியிருந்தார். அப்பொழுது அவரெதிரே ஆயிரம் சூரியரின் ஒளி போல ஒரு பேரொளி தோன்றியது. அதுகண்ட முனிவர்கள் இது என்ன ஆச்சரியம்! என்றார்கள். அப்பொழுது உபமன்னிய மகாமுனிவர் சிவபெருமானின் திருவடிகளைச் சிந்தித்தார். அவரது திருவருளினாலே திருக்கைலையினின்றும் நீங்கித் தென் பூமியிலே திருவவதாரம் செய்தருளிய சுந்தரமூர்த்தி நாயனார் எழுந்தருளி வருகின்றார் என்பதனை உணர்ந்தார். விரைந்தெழுந்து கைகள் இரண்டும் சிரசிற் குவிய ஆனந்த வருவி திருமேனியெங்கும் பெருக அத்திசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி நடந்தார். அப்பொழுது முனிவர்கள் "முனிவர் பெருமானே! சிவபெருமானையன்றிப் பிறரொருவரையும் வணங்காத நீர் இங்கே வணங்கிய காரணம் யாது" என்று வினாவினர். உபமன்னிய மகாமுனிவர், அவர்களை நோக்கிக் கூறுவாராயினர். ஆதிகாலத்திலே கைலாசபதியாகிய சிவபெருமான் தமது திருவுருவத்தைக் கண்ணாடியிலே பார்த்து அழைத்தருளுதலும் பலகோடி சூரியர்கள் ஒருங்கு திரண்டாற் போன்ற திருமேனிப் பிரகாசத்தோடு தோன்றிய அவர் பெயர் சுந்தரர். திருப்பாற்கடலில் தோன்றி அமரர்களை அஞ்சி ஓடச்செய்த ஆலகாலக் கொடு விடத்தைச் சிவபெருமான் திருவமுது செய்தருளும்பொருட்டுத் தமது உள்ளங்கையினுள்ளே அடக்கிக் கொண்டுபோய்க் கொடுத்தமையால் அவர் பெயர் ஆலால சுந்தரர் ஆயிற்று. அவர் சிவபெருமானுக்கு மலர்மாலை தொடுத்துச் சாத்துதலும் விபூதிப் பாத்திரம் தாங்குதலுமாகிய திருத்தொண்டு பூண்டவர். ஒருநாள் ஆலாலசுந்தரர் வழக்கம் போல அன்றலர்ந்த நன் மலர்கள் கொய்துவரத் திருநந்தவனச் சூழலுக்குச் சென்றார். அங்கு அவருக்கும் முன்னதாக ஆளுடைய நாயகியான அம்மையின் தோழியர் இருவர் இயற்கை மணம் கமழும் உமாதேவியின் கூந்தலுக்குப் பூக் கொய்துவர நந்தவனம் புகுந்தனர். அவர்கள் அனிந்ததை, கமலினி என்பவராவர். அழகுருவாகிய அப் பூவையர் இருவரும் பூங்கொடிகளில் பூக்களைக் கொய்து கொண்டிருக்கும்போது ஆலாலசுந்தரர் அவ் வழகியர் மீது அவ் வினையுந்தத் தம் மனதைச் செலுத்தினார். சுந்தரரின் காதல் மங்கையரும், அவரின் அழகுக் காட்சியையே தங்கள் கண்களில் கொண்டு மெய்மறந்து நின்றார்கள். பின்பு தங்களை உணர்ந்து தயாபரியாகிய அம்மைக்குத் தண்மலர் கொய்து கொண்டு அகன்றனர். பின்பு ஆலாலசுந்தரரும் அகிலலோக நாயகராகிய எமையாளும் ஈசனுக்கு இயைந்தனவாகிய பன்மலர்கள் கொய்து விரைந்து சென்றார்.

எங்கும் நிறைந்து எல்லாமறிந்து எல்லாம் செய வல்லவராகிய சிவபெருமான் ஆலாலசுந்தரரின் மனப்போக்கினை அறிந்து அருள் பொழியும் திருக்கண்களால் நோக்கினார். ஆலாலசுந்தரா! நீ மாதர் மீது மனம் வைத்தாய்! மண்ணுலகில் தென் நாட்டில் மானுடனாகப் பிறந்து அம் மங்கையரோடு இன்ப வாழ்வில் கலந்திருந்து தாபம் நீங்கிய பின்னர் மீண்டும் இங்கு வந்து சேர்வாயாக எனக் கட்டளையிட்டார். அதனைக் கேட்ட ஆலாலசுந்தரர் நடுநடுங்கினார். அடியற்ற மரம் போல கருணைக் கடலாகிய கைலாசபதியின் திருவடிகளின் முன்பு வீழ்ந்தார்; எழுந்தார். கண்ணீர் பெருகக் கைகூப்பித் தொழுதார். அன்பருளக் கோயில் கொண்டு அருள்புரியும் ஐயனே! புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விழைந்து, தங்கள் பொன்னனைய திருவடி நீழலை நீங்கிச் செல்லும் இந் நிலையாளனாகிவிட்டேன்! ஆயினும் மையல் தரும் மானுடனாய் நான் மயங்கும் போது என்னைத் தடுத்தாட்கொண்டு அருள்புரிய வேண்டும் பெருமானே! என்று வேண்டினார்.

வேண்டுவார் வேண்டுவன ஈயும் கருணா மூர்த்தியாகிய சிவபெருமான் அவ்வேண்டுகோளுக்கிரங்கி "அவ்வாறேயாகுக!" என அருள்புரிந்தார். பின்னர் அம்மை அப்பன் அருளிய வண்ணமே தென்னாட்டில் அநிந்ததை, கமலினி என்னும் அரிவையர் இருவரோடும் சுந்தரர் மானுடத் தோற்றத்தில் தோன்றித் தங்கியிருந்து காதலின்பம் துய்த்து, கண்ணுதற் பெருமானை மறவாத புண்ணியப் பேற்றினாலே இப்போது இங்கே திருக்கைலைக்குப் பேரொளிப் பிழம்பாகத் திரும்பி வருகின்றாரென்று உபமன்னிய முனிவர் கூறிச் சுந்தரமூர்த்தி நாயனாரின் தவப் பெருமையையும் வரலாற்று அற்புதங்கள் வன்செயல்களையும் விவரித்துச் சொன்னார்.

அதைக் கேட்ட முனிவர்கள் ஆனந்த பரவசம் அடைந்தார்கள். ஆலாலசுந்தரர் மாயை வலைப்படுகின்ற மானுடராகப் பிறந்த தென்னாடு மண்ணுலகில் எண்திசையிலும் மேம்பாடுடையதாய் விளங்குவதற்கு அந்நாடு செய்த புண்ணியம் யாதோ! என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

வினவினர். அதற்கு உபமன்னிய முனிவர் பின்வருமாறு தென்னாட்டுச் சிறப்புக்களை எடுத்துக் கூறுவாராயினார்.

அருந்தவ முனிவரெனப் புகழப்படும் வியாக்கிரபாத முனிவராகிய என் தந்தை வழிபாடு செய்த சிதம்பரம் என்னும் திருத்தலம் தென்னாட்டில் இருக்கின்றது. ஐந்தொழிற் கடவுளாகிய அம்மையப்பன், எம்மையாளும் சிவஞானக் கொடியான சிவகாமவல்லி அம்மையார் தவப்பெரு வடிவமாக வீற்றிருந்து நோக்க, ஆனந்தத் திருநடனம் ஆடும் திருப்பதியும் அதுவேயாகும். பதியை நோக்கும் பசுவர்க்கங்களுக்குப் பெரும் பற்றை விளைவிக்கும் தலமாதலால் அத்தலம் பெரும்பற்றப்புலியூரெனவும் பெயர் பெறும். ஆகவே அத்தகைய மேன்மை வாய்ந்தது தென் திசையைத் தவிர வேறு எத்திசை உண்டு? நிலமகளின் இதய தாமரை போல் விளங்கும் திருவாரூரில் வேதமூலமாகிய சிவமும் பிரணவமும் வெளிப்பட்டு மங்கையொரு பங்கரான தியாகராசப் பெருமான் எழுந்தருளி இருக்கின்றார். காமாட்சி அம்மையார் கண்ணுதற் கடவுளாகிய தம்பிரானை, கம்பையாற்றின் கரையிலே வழிபாடு செய்த காஞ்சிபுரம் என்னும் சிவத்தலம் உண்டு. விண்ணவரும் மண்ணவரும் போற்றும் வையகத் திருப்பதியாகிய அத்திருப்பதியும் தென்னகத்தில் தான் உள்ளது. மெஞ்ஞானபீடத்தின் குருமூர்த்தியான திருநந்திதேவர் தவம்செய்து திருவருளைப் பெற்ற திருவையாறு என்னும் திருத்தலமும் தென்னாட்டில்தான் உள்ளது. எல்லாத் தேசங்களையும் சிறப்புறச் செய்யும் தென்னாட்டிலேதான் சீர்காழி என்னும் திருத்தலம் ஊழிமுதல்வராய் விளங்கும் சிவபெருமான் தோணிபுரத்திறைவனாய்த் திருவருள் புரியும் பேறு பெற்று விளங்குகின்றது. இன்னும் எம்பெருமானை வழிபட்டுப் பேறடையத்தக்க புண்ணிய சிவதலங்கள் எண்ணற்றன தென் திசையில் இருக்கின்றன. ஆகவே திசை பற்றிப் பேசப் புகுந்தால் தென்திசைக்கு வேறு எந்தத் திசையும் ஈடிணையாகமாட்டா என்று கூறிய உபமன்னிய முனிவர் செந்தமிழ்த் திருப்பாடல்களாகத் தமிழ் வேதமாகிய தேவாரத் திருப்பதிகங்களை அருளிச்செய்த சுந்தரமூர்த்தி நாயனாரின் திருநின்ற பெருமைகளை எடுத்துத்துரைத்தார். முனிவர்கள் பேரானந்த பரவசமடைந்தனர்.

சிவநெறித் தொண்டர்களின் வரலாற்றைத் தொகுத்துக் கூறும் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைச் சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் தியாகரர்சப் பெருமானின் திருவருளால் பாடியருளினார். அதனை மாக்கதையாக விரித்துக் கூறச் சேக்கிழாராகிய சிறியேன் பேராவல் கொண்டேன். திருத்தொண்டத் தொகையே இம்மாக்கதைக்கு நற்பதிகமாகும். அதனைத் தழுவிச் சிவனடியார்களின் சீரிய வரலாறுகளையும் சிவனருட்பாங்கினையும் உணர்ந்து உய்தி பெறுமாறு திருத்தொண்டர் புராணமாகக் கூறுகின்றோம். உலகம் உய்யவும் சைவம் தழைத்தோங்கவும் திருத்தொண்டத் தொகை தோன்றிய பெருமையும் சிவனடியார் திருக்கூட்டம் நிறைந்து வாழும் அருமையும் அமைந்த காவிரிவள நாடான சோழநாட்டின் சிறப்பை முதற்கண் கூறுவாம்.

இம்மாக்கதை சாதி குலம் பிறப்பென்னும் சந்தேகம் தெளிவித்து மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றும் தூயனவாகச் செய்யும் சிவதொண்டும், சமூகத் தொண்டும் ஒன்றாந்தன்மை உடையவை என்பதை உணர்வித்துச் சமய வாழ்வில் வாழ்வாங்கு வாழ வைக்கும் தகைமையுடையது. ஆகவே நாம் படித்தல், கேட்டல், சிந்தித்தல் ஆகிய மூவகை நெறி நின்றுணர்ந்து ஒழுகிப் பிறவிப் பயனைப் பெறுவோமாக.

---

**சித்தர்கள் கண்ட சிறந்த மருந்து**

வாழைப்பட்டை : வாழைப்பட்டையைப் பிழிந்து நீர் எடுத்துப் பாம்பு கடித்தவர்களுக்குக் கொடுக்க உடனே விஷம் இறங்கும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் குருபூசை

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் குரு பூசை கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் தை மாத புனர்பூசத் தினத்தன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கைதடி பல ஆத்ம ஞானிகள் வாழ்ந்த இடமாகும். யோகர் சுவாமிகளின் உத்தம சீடரான மார்க்கண்டு சுவாமிகள் கைதடியிலேயே பிறந்து வாழ்ந்தவர். யோகர் சுவாமிகள் அடிக்கடி கைதடிக்குச் செல்வது வழக்கம். இப்பிறப்பினாற் போலும், இணுவிலில் பிறந்து கந்தர்மடம் வேதாந்த மடத்தில் ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளிடம் தீட்சை பெற்ற ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் கைதடியில் தமது ஆச்சிரமத்தை அமைத்துக் கொண்டார். இணுவில், சின்னத்தம்பிப் புலவருக்குச் சிவகாமி அம்மனின் திருவருளால் 1924-ம் ஆண்டில் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் ஏகபுதல்வராகப் பிறந்தார். இவரது பூர்வாச்சிரமப் பெயர் பேராயிரம் உடையார் என்பதாகும். ஸ்ரீ சச்சிதானந்தம் என்பது மகாதேவ சுவாமிகளால் வழங்கப்பட்ட திட்சாநாமமாகும். மிக இளம் வயதிலேயே மகாதேவ சுவாமிகளிடம் சரணடைந்த ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் குருநாதரின் கட்டளைப்படி ஆறு ஆண்டுகள் கௌபீனதாரியாகச் சென்று வீடு தோறும் பிச்சையேற்று வாழ்ந்ததுடன் இரவு வேளைகளில் இல்லறத்தார் வீடுகளில் தங்காது சுடலைகளிலும் கோவில் மடங்களிலும் தங்கித் தவம் முடித்தார். இதன் பின்னரும் ஏகதேசியாகப் பிச்சையேற்று வாழ்வதையே விரும்பினார். இதன்மூலம் மக்களுக்கும் தனது சமூகத்துக்கும் அற வாழ்வின் பெருமையை எடுத்துக்காட்ட விரும்பினார். சுவாமிகள் தத்துவ போதனை, உபநிடத போதனை, பகவத்கீதை ஆகிய சிறந்த நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டிப் பக்தர்களின் ஐயங்களைத் தீர்த்து வைத்தார். சுவாமிகள் 'அத்வைத ஞானவழிப் பாடல்கள்' என்னும் தொகுப்பு நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இந் நூலில் பல தத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ளன.

சுவாமிகளின் வாழ்க்கையில் பெரும் பகுதி கைதடியிலும், தென்மராட்சிப் பகுதியிலும் கழிந்தபோதும் சுவாமிகளின் சமாதி இணுவிலில் உள்ள காரைக்காட்டிலேயே நிறுவப்பட்டுள்ளது. கைதடி சச்சிதானந்த ஆச்சிரமம் சுவாமிகளின் பிரதம சிஷ்யையான செல்லம்மா அம்மையாரால் பேணப் பட்டு வருகின்றது.

---

## சித்தர்கள் கண்ட சிறந்த அருமருந்துகள்

அறுகம்புல்: நீண்ட நாட்கள் உயிர்வாழ அறுகம்புல் சாப்பிடவும். மேற்படி புல்லை ஒரு பிடி எடுத்துத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி, அந்தத் தண்ணீருடன் பால், சீனி சேர்த்துச் சாப்பிடவும் காப்பி சாப்பிடும் பழக்கமுள்ளவர்கள் காப்பிக்குக் கொதிக்க வைக்கும் தண்ணீரிலேயே இந்தப் புல்லைப்போட்டு, காய்ச்சிக் காப்பிப் பொடியில் ஊற்றி வடித்துப் பால் சேர்த்துச் சாப்பிடலாம். சிறுநீர் தடங்கல் இல்லாமல் இறங்கும். மூத்திரப்பையை அது பலப்படுத்தும்.

வாழைத்தண்டு: மூத்திர அடைப்புள்ளவர்கள், கல்லீரலில் கல்லடைப்புள்ளவர்கள் மேற்படி தண்டைச் சிறு துண்டுகளாக்கித் தயிரில் கலக்கித் தாளித்துத் தயிர்ப் பச்சடியாக உணவில் அருந்தவும். அடிக்கடி உபயோகித்தல் நலம். சிறுகீரையையும் அடிக்கடி உபயோகிக்கவும்.

எருக்கலை: நாய் முதலிய விஷப் பிராணிகள் கடித்த உடனே எருக்கலையின் பாலைக் கடிவாயில் அடித்தால் விஷம் ஏறாது. அது விடத்தைக் கீழே இறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கதிரைவேற்பிள்ளையவர்களின் நற்பணிகள்

கலாநிதி நா. ஞானகுமாரன்

( மெய்யியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். )

தேன்மதுரத் தமிழோசையின் சிறப்பினையும் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" எனும் கூற்றுக்கமையச் சைவத்திறனையும் எடுத்தாண்டு தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெருமைக்கு உரிய பல அறிஞர்களைக் காண்கின்றோம். அந்த வரிசையில் ஈழவளநாட்டில் குறிப்பாக புலோலியம்பதியில் வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் பலரும் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குவது அறிதற்குரியதாகும். யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனப் பாரதியாரால் போற்றப்பெற்ற சி. வே. அருளம்பல சுவாமிகள், இலக்கணவித்தகர் என எடுத்தாளப்பெற்ற கந்தமுருகேசனார், சிவசம்புப் புலவர், சின்னத்தம்பிப் புலவர், சிவபாத சுந்தரம், கார்த்திகேயபிள்ளை போன்ற பல அறிஞர் குழாத்தினுட் சிறப்பிடம் பெறுபவராக மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் விளங்கினார் என்றால் மிகையாகாது.

தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றிவளர்த்த நல்லைநகர் தந்த ஆறுமுகநாவலர் அடியொற்றி, கதிரைவேற்பிள்ளையவர்களும் அரும்பணியாற்றினார். 1871 ஆம் ஆண்டு மேலைப்புலோலியில் பிறந்த பிள்ளையவர்கள், மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்றுப் பிற்பட அக்கல்லூரியிலேயே சில காலம் ஆசிரியராகவும் விளங்கினார். தம் கல்விப்பணியின் செழுமையினைத் தொடர, தமது இருபத்தோராவது வயதளவில் தமிழகம் சென்றார். ஞானப்பிரகாச சுவாமிகள், ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர் போன்ற அறிஞர்கள் பலரினைப் போலக் கதிரைவேற்பிள்ளையவர்களும் தமிழகம் சென்று தம் கல்விப்புலமையின் வலிமையினையும் செழுமையினையும் தெளிவுறுத்திப் புகழ் பரப்பினார். தமிழ்நாட்டில் சைவத்தினையும், தமிழையும் வளர்த்துப் புகழீட்டிய வகையில் கதிரைவேற்பிள்ளையுடைய பணிகள் பலவகையில் பரந்து விரிந்து விளங்கிற்று.

இருமொழிப் பாண்டித்தியம் கொண்டிருந்த கதிரைவேற்பிள்ளையவர்கள் சிறந்த பேச்சாளராகவும் தாம் கொண்ட கருத்தை முறையாகத் தர்க்கிக்க வல்ல சிந்தனையாளராகவும் விளங்கினார். பழம்பெரும் தமிழ்ப் பொக்கிஷங்களாக விளங்கிய நல்ல பல நூல்கள் காலத்தின் தொன்மையில் அழிந்திடா வண்ணம் காக்க வேண்டிய பொறுப்பினையும் இவர் மறந்தாரில்லை, அதேவேளை பேரிலக்கியங்கள் பலவற்றிற்கு விளக்கவுரை எழுதப்படுவது கற்றறிந்த மாந்தர் பலருக்கும் பயன்பாட்டிற்குரிய பணியாகவும் விளங்கிற்று. இவ்வகையில் பதிப்பாசிரியராகவும் உரையாசிரியராகவும் தம்மைப் பல்வகைப் பணிகளில் ஈடுபடுத்தித் தமிழுக்கு அழியாப் புகழினையும் எழுச்சி மிக்க உயர்வினையும் அளித்தவர் எனலாம். கூர்மபுராண விரிவுரை, யாப்பருங்கல விருத்தி, பழனித்தல புராணவுரை, திருவானைக் கலம்பகம், சிவராத்திரிப் புராணவுரை போன்றன அவரது உரைவன்மைக்குச் சான்று பகர்கின்றன.

கதிரைவேற்பிள்ளையவர்களுடைய தமிழ்த்தொண்டில் அழியாப்புகழினை ஈட்டிக்கொடுத்தது அவரது தமிழ்ப்பேரகராதி எனலாம். இதனை யாழ்ப்பாண அகராதி எனவும் அழைத்தனர். ஆயிரத்து அறுநூற்றி முப்பத்தாறு பக்கங்களைக் கொண்டமைந்த இவ்வகராதி தமிழில் எழுந்த பேரிலக்கியங்கள், இலக்கணங்களைச் சாதாரண மக்களும் எளிதில் கற்றுணர்ந்துகொள்வதற்கு நல்லதொரு வழிகாட்டியாக அமைந்தது. இவ்வகராதியே தமிழ்மொழிக்கென எழுந்த அகராதிகளில் முதலாவதெனச் சுட்டப்பெறும் பெருமைக்குரியதாகும். இதன் சிறப்புக் கருதியே இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

வகராதி பல பதிப்புக்களைக் கண்டதும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

சிவ சேத்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதசிபுராண அரும்பதவுரை, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் வரலாறு முதலாய நூல்களும், கதிரைவேற்பிள்ளையவர்களின் தமிழ்ப்பணியின் பரப்பினை விரித்து நிற்கின்றன. உ. வே. சாமிநாதையரின் பதிப்பாசிரியப் பணியின் காத்திரத் தன்மையை உணர்த்துமாற்போல, கதிரைவேற்பிள்ளையவர்களும் நைடத விருத்தியுரை, அகத்திய தேவாரத் திரட்டு, கதிர்காமக் கலம்பகம் முதலான நூல்கள் பலவற்றினைப் பதிப்பித்தவராவர். குறிப்பாக நைடதத்திற்கு அவர் எழுதிய ஆராய்ச்சியுரை அறிஞர்கள் பலராலும் பெருமதிப்புக்குரிய வகையில் சிறப்பித்துக் கூறப்பெற்றமை பிள்ளையவர்களின் நுட்ப அறிவிற்குச் சான்று பகர்வதாகின்றது. உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், நூலாசிரியராகவும் விளங்கியது மாத்திரமன்றி, சிலேடை நயம் மிக்க கவி யாத்த பெருமை பிள்ளையிடம் மிஞ்சியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவரது கருவூர் மான்மியம் அவரது பாடல் தரத்தின் சிறப்பிற்கும் நுட்ப கருத்தமைப்பிற்கும் தக்கதோர் உதாரணமாக விளங்கிற்று. சதாவதானி எனும் பட்டத்தைப் பறுவதற்குரிய வகையில் அமைந்த அவதானப் பரீட்சையில் பிள்ளையவர்கள் பல்துறை சார்ந்த பேரறிஞர்களால் எழுப்பப்பெற்ற வினாக்களுக்கெல்லாம் பதிலளித்த போது அவரது கவியாக்கும் புலமையும் தெளிவாகப் புலப்பட்டமை காணலாம். தொடக்கச் சொல்லும் முடிக்கும் சொல்லும், சுட்டிப்பாவில் உள்ளடங்க வேண்டிய கருப்பொருளும், பாவின் வகையும் கூறியதும் கவி யாத்தளித்த பெருமை பிள்ளையவர்களின் ஆழ்ந்த புலமைக்குச் சான்றாயிற்று.

கதிரைவேற்பிள்ளையவர்களுடைய காலத்தில் தமிழும் சைவமும் தளர்வுற்றுப் பிறமதத்தவர்களின் பிரசார மருட்சியினுள் மக்கள் மயங்கித் திரிந்த காலமெனலாம். மக்களைத் தம்நிலை உணர்த்தி, தம் மதச் சிறப்பை உணர வைக்கவேண்டிய பணியைக் கதிரவேற்பிள்ளையவர்கள் தாமே மனமுவந்து ஏற்றுக்கொண்டமை சைவத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாயிற்று, மேலும் அவரது சொற் பெருக்காற்றும் திறமையும் வாதிட்டுரைக்கும் நுட்பமும் சைவத்தின் மறுமலர்ச்சிக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களாயிற்று. கதிரைவேற்பிள்ளையவர்களின் சமயப்பிரசாரங்களை மக்கள் விருப்புடன் நாடிவரத் தொடங்கினர். அவரது சிந்தனைகளைச் செவிமடுத்த மக்கள் பலரும் பிறமதப் பிரசாரங்கள் விளைத்த மயக்கங்களினின்று விடுவதற்கு வாய்ப்பாயிற்று. தருக்கம், நகைச்சுவை, இலக்கிய நயம், ஆழ்ந்த பொருளமைதி ஆகியன கைவரப்பெற்று அவர் பேச்சுக்கள் விளங்கின. கற்றோரும், மற்றோரும் களிப்பெய்தி அவரின் பேச்சில் தம்மை உணர்ந்து, சமயத்தின் பெருமையில் இறுகத் திளைப்பவராயினர். அவரது கருத்தாழம் மிக்க பேச்சுக்கள் தம் மத உண்மைகளை உணர்ந்து கொள்வதற்கு மாத்திரமன்றிப் பிறசமயத்தவர்களின் போலி நிலைகளையும், பொய்த் தோற்றங்களையும் வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாயிற்று, இதனாலேயே இவரது பேச்சுக்கள் சைவத்திற்குப் புத்துயிரும், புது மெருகும், ஏன் புது வாழ்வே கொடுத்ததெனலாம். இவரது பேச்சுக்களின் நயங்கருதியே மாயாவாத தும்ச கோளரி எனும் சிறப்புக்குரிய பட்டத்தினைக் காசிவாசி செந்தில் நாதையர் தலைமையில் அளிக்கப்பெற்றமை காண்கின்றோம். அதேபோல ஆரணி சமஸ்தானத்தில் வித்வானாக இருந்த காலத்தில் " அத்துவித சித்தாந்த மகோத்தாரணர் " எனும் சிறப்புப் பட்டத்தினையும் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஆறுமுகநாவருக்கும் இராமலிங்க சுவாமிகளுக்கும் இடையில் எழுந்த அருட்பா – மருட்பா மோதலின் தொடர்ச்சியைப் பிள்ளையவர்களும் எதிர்நோக்க வேண்டியதாயிற்று. கால் நூற்றாண்டுக்குப் பிற்படவும் அருட்பா – மருட்பா எனும் சர்ச்சையின் காரணமாகக் கதிரைவேற்பிள்ளையவர்கள் நீதிமன்றம் ஏறவேண்டியதான சூழல் எழுந்தது. நீதிமன்றத்தில் தம் கருத்தினை ஆணித்தரமாக எடுத்துரைத்து நீதியைத் தன் பக்கம் நிலைநாட்டிக் கொண்டார். அவரது " போலியருட்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுப்பு' எனும் கண்டன நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த நூலாக்கத்தின் வழி 'போலி யருட்பாப் பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண்டனப் பிரசண்ட மாருதம்' எனும் சிறப்புப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். மேலும் 'சைவசித்தாந்த மகாசரபம்' எனும் பட்டமும் இவருக்கு அளிக்கப் பெற்றுக் கௌரவிக்கப்பட்டார். இவரது சைவ பூஷண சந்திரிகை, சைவசிந்தாந்தச் சுருக்கம் ஆகியன சைவசமய உண்மைகளையும் சிறப்புக்களையும் விளக்கி நிற்கும் நூல்களாகும். மருட்பா மறுப்புப் போலப் புத்தமதக் கண்டனமும் பிள்ளையவர்களின் கண்டன மரபில் எழுந்த நூல்களில் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

கதிரைவேற்பிள்ளையவர்கள் கந்தனில் அளவுகடந்த பற்றுடையவராய் விளங்கியமை காண்கின்றோம். சுப்பிரமணிய பராக்கிரமம் எனும் நூல் முருகப்பெருமானிடத்தில் அவர் கொண்ட பக்தியினை எடுத்துரைக்கப் போதியதாகும். கவிதையும் உரைநடையும் கலந்த இந்நூல் அவரின் அறிவாழத்தை எடுத்து விளக்கும் ஓர் உயரிய படைப்பாக விளங்குகின்றது. இந்நூல் நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட தமிழ், வடமொழி நூல்களினைச் சான்றாதாரமாகக் கொண்டு ஆக்கப் பெற்றுள்ளமை மனங்கொளத் தக்கதாகும். இதனைவிட, புதுச்சந்நிதிக் கந்தர் பிள்ளைத் தமிழ், கந்தர் நவமணிமாலை போன்ற நூல்களும் கந்தனில் அவர் கொண்டிருந்த காதலை எடுத்துரைக்க வல்லனவாகும். மேலும் ஸ்ரீசரஸ்வதிபீடம் கந்தப்ப சுவாமிகளால் பாடப் பெற்ற கதிர்காமக்கலம்பகம் எனும் நூலும் அழிந்துவிடா வண்ணம் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பட்டமையும் காணற்குரியதாகும்.

தமிழும் சைவமும் தளர்ந்துவிடாது வளர்ந்து மேன்மையுறப் பிள்ளையவர்கள் வாழ்வு உரமாயிற்றென்றால் மிகையாகாது. சதாவதானி எனும் ஆற்றல் மிக்கவராய்த் தன் திறமையினைப் பலர் நிறைந்த பேரவையில் நிருபித்துச் சிறப்புக்குரிய பட்டத்தினைப் பெற்றுக்கொண்டவராவார். நாவன்மைமிக்க பிள்ளையவர்களின் பிரசங்கங்களும் சொல்வன்மை கலந்த நூல்களும், தமிழுக்கும் சைவத்திற்கும் அளப்பரிய பணிகளாக அக்காலத்தில் அமைவுற்றன. அன்னாரின் பணிகள் இன்றும் தமிழின் இனிமையையும் சைவத்தின் பெருமையினையும் எமக்கு உணர்த்தி நிற்கும் சான்றுகளாய் மிளிரக் காண்கின்றோம். எம் மண்ணில் பிறந்து எம் சிந்தனைகளை வளம்படுத்திய இப்பெரியோர்களை மனங்கொள்வது எம் எல்லோருக்கும் நன்மை பயப்பதாகும். கதிரைவேற்பிள்ளையவர்களின் பார்பூத்த புகழை நாம் அறிவது மாத்திரமன்றி வருங்காலத்துச் சந்ததியினரும் அறிந்து கொள்ளவும் அவர் ஆற்றிய பணிகளை உள்ளத்திடை பதித்துக் கொள்ளவும் வேண்டி அவர்தம் பணிகள் அழிந்திடா வண்ணம் பேணிக் காப்பது எம் தலையாய கடனாகும்.

---

உலகத்தின் வாழ்க்கை முழுவதிலும் கடவுள் நிரம்பியிருக்கின்றார். கடவுள் இல்லாத பொருளே இல்லை. இதை ஆதிக்க வழக்கில் சொன்னால் இங்கே நடப்பது கடவுள் ஆதிக்கந்தான். அவரே எல்லாவற்றிற்கும் அதிபர். இதையுணர்ந்து அனைத்தையும் அவரிடம் சமர்ப்பித்துவிட்டு, அவரிடமிருந்து அவர் அருளால் கிடைப்பவைகளை நாம் பிரசாதமென்று ஏற்கவேண்டும். இங்கே எனது என்று எதுவுமில்லை, எல்லாம் கடவுள் உடைமை என்று எண்ணுபவனுக்கு எல்லாம் தானே கிடைக்கும். கிடைப்பதைக்கொண்டு அவன் திருப்தியாக இருந்து வரவேண்டும். பிறரைக் கண்டு பொறாமைப்படுதலோ, பிறர் பொருளுக்கு ஆசைப்படுதலோ கூடாது.

[ 1ஆம் மந்திரம் — ஈசாவாஸ்ய உ. நி. ]

5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்வாழ்க்கை

[ இரண்டு அறங்களில் முதன்மையானது. அறன்வலியுறுத்தலின் பின் வைக்கப்பட்டுள்ளது. ]

1. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

இல்வாழ்வான் 1) பிரமசாரி 2) இல்வாழ்வுவிட்டு மனையாளோடு கூடிச்செய்யும் தவ நெறியாளன் 3) முற்றும் துறந்த யோகி ஆகிய மூவரும் அவரவர் ஒழுக்கநெறி வழுவாது நிற்க உறுதுணையாவான்.

2. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

துறவிகளையும் வறியவர்களையும் பேணிக்காப்பதோடு தன்னிடத்து வந்து இறந்தவர்களுக்கான தீக்கடன், நீர்க்கடன் செய்வதும் இல்வாழ்வான் கடமையாகும்.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை.

பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றம் ஆகியோருடன் தன்னையுந் தான் ஓம்புதல் இல்வாழ்வானுக்குத் தலைக்கடனாகும்.

4. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பாவமில்லாத வழியில் உழைத்துப் பொருள் சம்பாதித்துப் பிறர்க்கும் பகுத்துண்டு வாழும் பண்புடைய இல்வாழ்க்கை, சந்ததி தொடர்ந்து நிலைக்க உதவும்.

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

கணவனும் மனைவியும் தம்முள்ளும் தம்மைச் சார்ந்தாரிடத்தும் அன்பு வழுவாதிருப்பின் அது இல்வாழ்க்கைப் பண்பும் அறஞ்செய்தலில் வழுவாதிருப்பின் அதுஅதன்பயனும் ஆம்

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்.

அறமாகிய பயன் தரும் முறையிலான இல்லறம் நடத்துபவன் துறவறத்திற் போய்ப் பெற என்ன இருக்கிறது? (அப்படியான இல்லறமே துறவின் பயனையுஞ் சேர்த்துத் தரும்)

7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

இல்லறத்தை அதற்குரிய இயல்போடு நடத்துபவன் புலனை அடக்கி ஆன்ம ஈடேற்றம் பெற முயலும் ஏனையரிலும் பார்க்க மேலானவன்.

8. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

தவம் செய்வோர் அவரவர் நெறியில் நிற்றற்கு ஆகவேண்டிய வகையில் உதவி, அற நெறி வழுவாதிருக்கும் இல்வாழ்க்கை, தவஞ் செய்து பேறுபெற முயலுந் துறவினும் பார்க்கக் கூடுதலான பொறுதி உள்ளதாகும்.

9. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

அறம் என்று சொல்லப்படுவது இல்லறமே. துறவறமும் பிறர் பழிப்பதான கூடா ஒழுக்க நெறி இல்லாததாயின் நன்றே.

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இயல்பான இல்வாழ்வை மேற்கண்டவாறு வாழவேண்டும், முறைப்படி வாழ்பவன் வானுறையும் தெய்வமாக மதிக்கப்படுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதமூர்த்தி (கேனோபநிடதக் கதை)

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டை நடந்தது. அதில் தேவர்கள் வெற்றி பெற்றனர். வெற்றியடைந்த களிப்பில் தேவர்களுக்கு ஆணவம் வந்துவிட்டது. "நம்முடைய வீரத்தால் அல்லவா பகைவர்களை வென்றோம்'' என்று கருதி இறுமாப்புக் கொண்டனர் தேவர்கள். தேவர்களின் அறியாமையைப் போக்கவேண்டுமே! எனவே, ஒளி வடிவில் தேவர்களுக்கு முன்னால் இறைவனாகிய பிரமம் தோன்றியது. அந்த ஒளி என்ன என்பதைத் தேவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவர்கள் அக்கினிதேவனை அழைத்து "நீ போய், யார் அந்த ஒளி என்று அறிந்து வா,'' என்று அனுப்பினார்கள், அந்த ஒளி உருவத்திற்கு அருகில் அக்கினிதேவன் சென்றார். "நீ யார்?'' என்று கேட்டது ஒளி. "என்னைத் தெரியாதா? நான்தான் அக்கினி. என்னை உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!'' என்று பதில் கூறினான் அக்கினிதேவன்.

"அவ்வளவு பெரியவனா நீ! உனது சக்தியை நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று ஒளி கேட்டது. "உலகத்திலே எதையுமே எரித்துவிடும் சக்தி எனக்கு உண்டு,'' என்றான் அக்கினிதேவன் இறுமாப்புடன். "அப்படியா! எங்கே இதை எரியும்படி செய் பார்க்கலாம்'' என்று கூறி ஒரு சிறு துரும்பை எடுத்து அக்கினிதேவனின் முன்னால் ஒளியுருவம் வைத்தது. அக்கினிதேவன் தன் சக்தி அனைத்தையும் பயன்படுத்தியும் அந்தத் துரும்பை எரிக்க இயலவில்லை. அக்கினிதேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மனத்தில் ஆச்சரியமும் அவமானமும் பொங்க அக்கினி திரும்பினான்.

வாயுதேவன், "நான் போய் அந்த ஒளியுருவம் என்ன என்று கண்டு வருகிறேன்'' என்று ஒளிக்கு அருகில் சென்றான். "நீ யார்'' என்றது ஒளி.

"நான்தான் வாயுதேவன். வானில் அசையும் வல்லமை மிகுந்த காற்று. நான் எந்தப் பொருளையும் பறக்கும்படி செய்து விடுவேன்'' என்று இறுமாந்து கூறினான் வாயுதேவன்.

"அப்படியா! இந்தத் துரும்பை அசைத்துவிடு பார்க்கலாம்'' என்று கூறி ஒரு சிறு துரும்பை வாயுதேவனுக்கு முன்வைத்தது ஒளி.

எவ்வளவோ முயன்று பார்த்தான் வாயு. அந்தத் துரும்பைச் சிறிதுகூட அசைக்க முடியவில்லை. வாயுதேவனுக்கு அவமானம் தாங்க முடியவில்லை.

தேவர்கள் திகைத்தார்கள். முடிவில் தேவர்கள் தலைவன் இந்திரனே அந்த ஒளியுருவத்தை நெருங்கி வந்தான். அதற்குள் அந்த ஒளி மறைந்துவிட்டது.

பிறகு தான் இந்திரனும் இதர தேவர்களும் உணர்ந்தார்கள். அந்த ஒளியாகத் தோன்றியது பிரமம்தான் என்பதை அக்கினிதேவனுக்கு எரியும் சக்தியைக் கொடுப்பதும், வாயுதேவனுக்கு எதையும் அசைக்கும் ஆற்றலைக் கொடுப்பதும் பிரமம்தான் என்பதை மீண்டும் நினைவிற் கொண்டனர். தாங்கள் போரில் அடைந்த வெற்றிக்குக் காரணமும் இறைவனே என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். "கண்கள் இமைப்பதும் கருமேகங்கள் மின்னுவதும் இறைவனின் ஆற்றலால்தான்'' என்று கூறி இக்கதையை உபநிடதம் முடிக்கிறது. இயற்கைப் பூதங்கள் ஆன நெருப்பிலும் காற்றிலும் உள்ள சக்தி இறைவன்தான் என்ற உண்மையினை இந்த உபநிடதக் கதை எடுத்துக் கூறுகின்றது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட இவ்வுண்மையினை வழிவழி வந்த மெய்யடியார்கள் நமக்கு விளக்கியுள்ளார்கள்.

"ஆகாயம், காற்று, நெருப்பு நீர், நிலம் என்ற ஐம்பூதங்களாக உள்ளது பிரம்மமே''

— பிரச்ன உபநிடதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சோமகாந்தராஜா மகனுக்குக் கூறிய அறிவுரை

[விநாயகபுராணத்தில் இருந்து சிறுநோக்கு]

தெல்லிநகர், சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள்

[ஆ - ர்:

தெல்லிநகர், காசிப்பிள்ளையார் கோயில் கணேசலிங்கக் குருக்கள் போல் சைவச் சிறார்களைச் சைவபக்தியொழுக்க நெறியில் வளர்க்கப் பாடுபட்டுழைப்பார் அரியர். குருக்களின் ஆஸ்திக சைவப்பணி விருப்பின் பிரதிபலிப்பாக அமைகிறது இக்கட்டுரை.]

சோமகாந்தராஜா தனது மகன் எமகண்டனை அழைத்துத் தன் முன்னால் உட்காரச்செய்து கீழ்வரும் அறிவுரைகளைப் போதிக்கத் தொடங்கினார். மைந்தனே! உலகத்தவர் யாவரும் உய்வடைவதற்காகத் தர்மங்களும், தர்மநெறிகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றும் அளவில்லாதவை. அவைகளுள் உனக்குரிய தருமத்தை மாத்திரம் கூறுகின்றேன்.

எனது உயிரினும் சிறந்த மைந்தனே! விடியுமுன் ஐந்து நாழிகை உள்ள முகூர்த்தத்திலே நித்திரைவிட்டு எழுதல் வேண்டும். அதன் மேல் வேறோர் இடத்தில் இருந்து பாவங்களை நீக்குகின்ற திருநீற்றைத் தரித்தல் வேண்டும். பின் குருவையும் கடவுளையும் மனத்தில் தியானிக்க வேண்டும். பின்பு பூமாதேவியை நோக்கி, அன்னையே அடியேன் நடக்குந்தோறும் எனது கால்கள் படுதலால் ஏற்படுகின்ற துன்பத்தைப் பொறுத்தருளுவாயாக என்று பிரார்த்திக்க வேண்டும். அதன்மேல் வேதாகம முடிபுப் பொருளே! அறம் முதலாய நால்வகைப் பொருள்களையும் சரணடைந்தவர்கட்கு அருளுகின்ற அருட் கடலே! விக்கினங்களைத் தீர்த்து நல்லருள் செய்வாய்! என்று யானைமுகப்பெருமானைத் தியானிக்கவேண்டும். நமக்கு நல்வழி புகட்டுமாறு சந்திரசடாதரனாகிய பரமசிவத்தையும் சம்சாரத்தால் வரும் துன்பங்களைப் போக்குமாறு பார்வதிதேவியாரையும் வழிபடவேண்டும். பூமகள் மணாளனாகிய திருமாலையும், சூரியபகவானையும் இறுதியாகத் தோத்திரஞ்செய்தல் வேண்டும்.

அறம் முதலாய நான்கு உறுதிப் பொருள்களையும் காத்தற் கேதுவாயுள்ள மழை பெய்யுமாறு யாகங்கள் செய்யவேண்டும். நாட்டில் வறுமை வராமல் தான தருமங்களைச் செய்ய வேண்டும். ஐம்பொறிகளையும் அடக்கி நிற்கும் அறவோரையும், அந்தணரையும், கல்வியால் மேம்பட்டோரையும் வழிபட்டு அவர்கள் மீது நீங்கா அன்புடன் இருத்தல் வேண்டும். துறவிகள் முதலியோரை இகழக்கூடாது. ஆசாரியரையும் பெரியோரையும் மதித்து நடக்கவேண்டும். இம்மை, மறுமை முதலாயவற்றிற்கு நன்மை பயக்கின்ற தரும ஒழுக்கங்களினின்றும் தவறக்கூடாது. கோபம், பொறாமை, கடுஞ்சொல் இவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தருமநெறி கொண்டொழுகினால் அன்பு தோன்றும். அந்த இன்பமே மேலான இன்பமாகும். தருமத்தை மறந்தால் கேடு உண்டாகும்.

பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய முத்திறத்தாரையும், அங்கவீனர்கள் முதலாயினோரையும் பாதுகாத்தல் வேண்டும். வரவிற்கு ஏற்ற செலவு செய்பவராயும் நாயகனுக்குப் புகழும் புண்ணியமும் சத்துருக்கள் முன்னிலையில் சிங்கம்போல நடக்கும் வலிமையும், முத்திப்பயனும் ஒருவனுக்குக் கற்புள்ள மனைவியாலேதான் கிட்டும். எனவே அத்தகைய மனைவியோடு கூடியிருந்து இல்லறத்தை நடாத்தவேண்டும். ஒரு தொழிலைச் செய்யுமிடத்து அஞ்சாமையும், ஆளுமையும் மிக அவசியமாகும். கொலை முதலிய பாவங்களை நீக்கிக்கொள்ளவேண்டும். மக்கள் வருத்தமுறாது இனிய சொற்களால் பேசுதல் வேண்டும். குற்றம் உள்ளவர்களைத் தண்டித்து உயிர்கள் அறம் முதலாம் உறுதிப் பொருட்களை அடையும் வண்ணம் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சந்தேகம் தெளிதல்

# இந்து மதம் சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில் கூறுகிறார்

சிவாசார்ய சிரேஷ்டர், சித்தாந்த ஞானபானு
சிவஸ்ரீ ஈசான சுப்பிரமணிய சிவாசார்யர்

1. கேள்வி:- ஆலய பூஜையில் தமிழ் வேதத்தின் (தேவாரம்) முக்கியத்துவம் யாது?

பதில்:- அனேகமான ஆலயங்களில் நடைபெறும் பூஜையில் ஒரு தேவாரமும் ஒரு புராணமும் ஓதுவது வழக்கமாக இருந்து வந்தது. சில சமயங்களில் வழிபடுவோர் பலராக இருந்தும் தேவாரம் ஓதுவதற்கு முன்வருவோர் இல்லாமலும் போவதுண்டு. இன்று சமய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் ஆலயங்களில் திருமுறைகள் ஐந்தில் ஒவ்வோர் பாடல் பாடுவதையும், திருமுறைகள் முழுமையாக ஓதப்படுவதையும் காணும்போது பெரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. எனினும் சில கோயில்களில் நடைபெறுவதுபோல, பூசைக்கு முன் அல்லது பின் வழிபடுவோர் அனைவரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனையாகத் திருமுறைகளைப் பாராயணம் செய்தல் அவசியமாகும். இசையோடும் பொருளுணர்ந்தும் இவற்றை ஓதுதல் மேலும் சிறப்பானதாகும். ஞானிகள் வாயிலிருந்து சிவனருளால் திருமுறைகள் தோன்றிய காரணத்தால் அவற்றிற்கே ஆலயத்தில் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பாடசாலையில் பண்ணிசையை மாணவர்களுக்கு முக்கிய பாடமாகப் பயிற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

2. கேள்வி:- தேவாரம் ஓத முன்பும் பின்பும் திருச்சிற்றம்பலம் சொல்வதன் அர்த்தம் யாது?

பதில்:- திருமுறைகள் சிதாகாசத்து ஒலிகள். அங்கிருந்துதான் அவை வந்தவை. முறையாக ஓதப்படுகையில் அவை அங்கு போய்ச் சேர்தல் தவறாது. அதனால் ஓதுபவர் சிதாகாச சிந்தனையோடு நின்றோத வேண்டும். இவ்வெல்லாவற்றையும் முன்னிட்டு முதலிலும் முடிவிலும் திருச்சிற்றம்பலம் சொல்லவேண்டும்.

> ''தம்மல ரடியொன் றடியவர் பரவத்
> தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற் சேர
> அம்மலர்க் கொன்றை யணிந்தஎம் அடிகள்
> அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே.''

— சம்பந்தர் தேவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கேள்வி:- சில ஆலயங்களில் பூஜையின் முடிவில் ஆசீர்வாதம் கூறியபின் (திருமுறை) தமிழ் வேதம் ஓதப்படுகிறது. வேறு சில ஆலயங்களில் ஆசீர்வாதத்திற்கு முன் தமிழ் வேதம் ஓதப்படுகிறது. இதில் எது முறையானது?

பதில்:- வேதம் ஓதிய பின்பு தமிழ் வேதமாகிய திருமுறை ஓதுதலும், வட மொழியிலோ தமிழிலோ உள்ள பிற தோத்திரங்களை அதன்பின் பாடுவதும் முறையானது. சில வசதிகள் கருதிச் சிவாசார்யர்கள் வேதம் ஓதியபின் ஆசீர்வாதத்தைச் சொல்லிவிட்டு, திருமுறை ஓதுகிற நேரத்தில் வேறு கருமங்களைக் கவனிக்கும் நோக்கில் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். தேவாரம் வேதசாரம் ஆகையால் ஆரிய வேதம் ஓதியவுடன் தமிழ் வேதம் ஓதப்பட வேண்டும். இரண்டும் சமமாகச் சிவன்கழல் சேர்வதைத் திருஞானசம்பந்தர் உறுதிப்படுத்தியுள்ளார். சிவாசார்யார்கள் இதனை நடைமுறைப்படுத்துவதால் தமிழ் வேதத்திற்கு உரிய இடம் கொடுத்தவர்களாகி விடுவார்கள். உத்தர காரணாகமம் – ஆசீர்வாத விதிப் படலம், சுலோ, 25 பார்க்கத்தகும். மேலதிக விபரம் "சிவாலய பூஜையில் தமிழ் வேதம்" எனும் நூலால் அறியவரும்.

4. கேள்வி:- நந்தி தேவருக்குப் பூஜை நடைபெறும்போது தவில் வித்துவான்கள் மேள வாத்தியங்களை வாசிப்பதில்லை. இதன் காரணம் யாது?

பதில்:- நந்தி எம்பெருமான் மிருதங்கம் வாசிப்பதில் மகா நிபுணர். லயஞானம் படைத்தவர். ஆகையால் அவர்முன் தவில் வித்துவான்கள் தமது வாத்தியத்தை வாசிக்க நாணி அஞ்சுகிறார்கள்.

5. கேள்வி:- இறைவன் திருவீதி வலம் வந்தபின் பாத தீர்த்தம் கொடுப்பதன் அர்த்தம் யாது?

பதில்:- வெளியிலே சென்று வந்தவர் கால் அலம்பி உள்ளே புகுதல் பொது மரபு, அதைவிட இறைவனுக்குச் செய்யும் உபகாரங்களில் பாத்தியம் (பாதத்திற்கு நீர்–பாததீர்த்தம்) என்ற பாவனையில் இவ்வுபசாரம் அமைகிறது.

6. கேள்வி:- ஆலயங்களில் நடைபெறும் பூஜைகளிலும் கிரியைகளிலும் (பவித்திரம்) தர்ப்பை பூண்டு சங்கற்பம் செய்வதன் அர்த்தம் யாது?

பதில்:- பாவங்களில் இருந்து விடுபடுவதற்கும் கரையேறுவதற்கும், சங்கற்பித்த காரியம் இடையூறின்றி நடைபெறுவதற்கும் பவித்திரம் அணியப்படுகிறது.

7. கேள்வி:- லாஜபுஷ்பம் (நெற்பொரி சேர்ந்த புஷ்பம்) சமர்ப்பிப்பதன் காரணம் யாது?

பதில்:- நெல்லில், உள்ள உமி, தவிடு, முளை ஆகியவை முறையே ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றைக் குறிக்கின்றன. இம்மும்மலங்கள் ஞானாக்கினியால் தகிக்கப்பட்டு ஆன்மாவானது திருவடியைச் சென்றடைதலைக் குறிப்பதை அடையாளமாகக் கொண்டமைந்ததே லாஜபுஷ்பமாகும்.

8. கேள்வி:- இறைவனைப் பள்ளியறைக்கு எழுந்தருளச் செய்வதன் அர்த்தம் யாது?

பதில்:- இறைவன் அந்தர்யாமி என்ற ஞான உண்மையைக் கிரியைவழி அனுசரித்தல்தான் பொதுவில் ஆலயக் கிரியைகளின் அர்த்தம். இறைவன் ஆன்மாவிடத்தில் உள்ளவர், அவர் உண்டாற்றான் ஆன்மா உண்டதற்குப் பலன் என்ற நோக்கில் நைவேத்தியம் நடைபெறுகிறது. அதேபோல் இறைவன் உறங்கினாற்றான் ஆன்மா உறங்குதற்குப் பலன் என்ற நோக்கிற் பள்ளியறைப் பூசை நடைபெறுகிறது. இனி, பிரபஞ்சத் தோற்றம், ஒடுக்கம் ஊழிக் கணக்கில் நடைபெறுவது. முழுமைக்குள்ளதொன்று அதன் பகுதிகளுக்கும் என்ற நியாயப்படி ஊழி என்ற கால அளவின் ஆகச் சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சம் ஒருநாள். அதிலும் ஒரு சிருஷ்டியும் ஒரு லயமும் அமையும், உதய காலம் சிருஷ்டிக்கு அறிகுறி. அர்த்த யாமம் லயத்துக்கு அறிகுறி. இந்தச் சிருஷ்டி லயங்கள் இரண்டும் ஆன்மாக்களின் ஏகப்பட்ட நன்மைக்கானவை. அந்நோக்கில் இறைவனுக்கு உதயகாலத்தில் திருப்பள்ளி எழுச்சிப் பூசை சிருஷ்டியாலாம் நன்மையைப் போற்றுவதாகவும் அர்த்த யாமத்துப் பள்ளியிலமர்த்தும் பூசை லயத்தால் நேரும் நன்மையைப் போற்றுவதாகவும் அமையும்.

9. கேள்வி:- சுவாமிக்கு அபிஷேகம் முடிந்தபின் ஈரம் ஒற்ற வேண்டுமா? இதன் அர்த்தம் யாது?

பதில்:- கட்டாயமாக அபிஷேகம் முடிந்தபின் ஈரம் ஒற்றவேண்டும். இவ்வாறு ஈரம் ஒற்றும் ஆடைக்குத் திருவொற்றாடை என்று பெயர். இறைவன் திருமேனியில் உள்ள ஈரத்தை ஒற்றாதுவிடின், சளி சம்பந்தமான நோய்கள் சிவாசார்யர்க்கும், நிர்வாகிகளுக்கும் ஏற்படும் என ஆகமங்கள் செப்புகின்றன.

10. கேள்வி:- பல ஆலயங்களில் பிணக்குகள் நடைபெறுகின்றன. இதைத் தீர்ப்பதற்குத் தாங்கள் கூறும் ஆலோசனை யாது?

பதில்:- சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகிகளும், சிவாசார்யர்களும், வழிபடுவோரும் சமய சாஸ்திர அறிவு பெறாது இருப்பதுதான் இதற்கு மூலகாரணம். இக் குறைபாடு தங்களுக்கு உண்டு என்பதை அவர்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். சமய அறிவைப் பெற முயலவேண்டும். சமய அனுஷ்டானங்களையும், சமய ஒழுங்கு முறைகளையும் தம்மில் தாங்களே கடைப்பிடித்தால் இப்பிரச்சனைக்கு ஆலயத்தில் இடமிராது. சிவாலய பரிபாலகர்கள் குறிக்கப்பட்ட ஒரு ஒழுங்கில் சிவாசார்யர்களும் நிர்வாகிகளுங் கூடியிருந்து சைவசித்தாந்த விசாரணை செய்வதைக் கட்டாயப்படுத்தினால் இக்குறைபாடு விரைவில் நீங்கும் சாத்தியமுண்டு.

### சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ள

## இந்து சமய நிறுவனங்களுக்குப் புகழாரம்

சர்வதேச அரிமாக் கழகங்களின் 306 B மாவட்ட ஆளுநர் லயன். எஸ். சிவபாதசுந்தரம் அவர்கள் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வமாக வந்திருந்தார். தமது விஜயத்தின்போது உடுவில் விழிப்புலனற்றோர் இல்லமான வாழ்வகத்துக்கும், உரும்பராய் திருஞானசம்பந்தர் இல்லத்துக்கும், கைதடி சைவச் சிறுவர் இல்லத்துக்கும் விஜயஞ் செய்து அவற்றின் தேவைகளை அறிந்து கொண்டார். இந்துசமயப் பேரவையால் நடாத்தப்படும் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இடம் பெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர் 'கொழும்பில் இருக்கும் பெரிய இந்துசமய நிறுவனங்கள் விழிப்புலனற்றோரை அல்லது அநாதைகளைப் பராமரிக்கும் மனிதாபிமானப் பணிகளை அதிகம் மேற்கொள்வதர்கத் தெரியவில்லை. நான் இங்கு வந்து பார்த்தபோது இந்துசமய நிறுவனங்கள் இத்தகைய மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதோடு, இந்நிறுவனங்களுக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் கொழும்பு திரும்பியதும் இந்நிறுவனங்களின் சிறப்பான பணிகள் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறி இவற்றுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்' எனக் குறிப்பிட்டார்.

சர்வதேச அரிமாக் கழகங்களின் சங்கம் உலகிலுள்ள 181 நாடுகளில் 41000 கழகங்களையும் 1.5 மில்லியன் உறுப்பினர்களையும் கொண்ட மாபெரும் சமூக சேவைச் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இனக் கலவரங்களின்போது சேதமாக்கப்பட்ட இந்து ஆலயங்கள் பற்றிய விபரங்கள்

1983 யூலை 23-ந் திகதிக்குப் பின்னர் இனக்கலவரங்கள் காரணமாகச் சேதமாக்கப்பட்டு இதுவரை நிவாரணம் பெறாத சமய வழிபாட்டுத் தலங்கள் பற்றிய விபரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பற்றுறை அமைச்சுக் கோரியுள்ளதால் இவ்வாறு சேதமாக்கப்பட்ட ஆலயங்களின் விபரங்களைக் கீழ்க் கண்டவாறு முப்பிரதிகளில் தயாரித்து சம்பந்தப்பட்ட கிராம அலுவலர், பிரதேசச் செயலாளரால் அத்தாட்சிப்படுத்துவித்து ஒரு பிரதியைச் செயலாளர், புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பற்றுறை அமைச்சு, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3 என்ற விலாசத்திற்கு நேரடியாகவும், ஒரு பிரதியை யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும், ஒரு பிரதியை இந்து சமயப் பேரவை, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கும் அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட ஆலய முகாமையாளர்களையும் பரிபாலன சபையினரையும் கேட்டுக்கொள்கின்றோம். தேவையான விபரங்கள்:-

1. ஆலயத்தின் பெயர்:
2. திணைக்களப் பதிவு இல:
3. விலாசம்:
4. கிராம அலுவலர் பிரிவு:
5. திருத்துவதற்கான செலவு மதிப்பீட்டுத் தொகை:
6. இதுவரை பெற்ற நிவாரண விபரம்:

(மு. கு.) இந்து சமய அலுவல்கள் திணைக்களத்துடன் தம்மை இதுவரை பதிவு செய்து கொள்ளாத ஆலயங்கள் இந்துசமயப் பேரவையுடன் தொடர்பு கொண்டு தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அன்புள்ள இந்து மக்களே!**

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இடம்பெறும் இந்து சமய நிகழ்வுகள் பற்றிய செய்திகள் மிக அரிதாகவே எமக்குக் கிடைப்பதால் எமது சஞ்சிகையில் இந்நிகழ்வுகள் பற்றிய செய்திகள் இடம்பெற வேண்டுமெனப் பல அன்பர்கள் கோரியுள்ளனர். இக் கோரிக்கையை நிறைவேற்றுவதில் பல சிக்கல்கள் நமக்கு இருந்தபோதும் இம்மாதத்திலிருந்து 'சமகால இந்து சமய நிகழ்வுகள்' எனும் புதிய பகுதி ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இப்பகுதிகளில் பிரசுரிப்பதற்காக முக்கியமான இந்து சமய நிகழ்வுகள் பற்றிய செய்திகளை இந்து சமய அபிமானிகளும், இந்து அமைப்புக்களும் அனுப்பி வைக்கலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

நன்றி

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்து தர்மம்" சஞ்சிகை

## அச்சிட நிதி உதவியோர்

மலர் 1 : திரு. ந. தெய்வேந்திரன்

மலர் 2 : உடுவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 3 : நல்லூர் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 4 : இணுவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 5 : பருத்தித்துறை வாழ் இந்து சமய அபிமானிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடிச் சைவ சிறுவர் இல்லக்

# ★ கொடி வாரம் ★

## 10-03-95 — 16-03-95 வரை

இந்து சமயப் பேரவையால் நிர்வகிக்கப்படும் மேற்படி இல்லத்தின் வழமையான கொடிவாரம் இவ்வாண்டு மார்ச் 10-ந் திகதி தொடக்கம் 16-ந் திகதி வரை நடைபெறவுள்ளது. போர் காரணமாகத் தமது பெற்றோரை இழந்த இந்துக் குழந்தைகளும் வறிய குழந்தைகளும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த காலங்களில் போன்று இந்நிதிக்கு வாரி வழங்குமாறு பொதுமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். கொடிவாரத்தைச் சிறப்பாக் நடாத்துவதற்கு முன்னரைப் போன்று தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் சபைகள், வங்கிகள், பல்கலைக்கழகம், அரசசார்பற்ற நிறுவனங்கள், இந்துசமய நிறுவனங்கள், இந்துக் கோயில் பரிபாலன சபைகள் ஆகியவற்றை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இதற்குத் தேவையான நிதி திரட்டும் பட்டியல்களையும் உண்டியல்களையும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி மூலம் இந்துசமயப் பேரவை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

வறியவரின் கடும் பசியைத் தீர்த்தலால் உண்டாகும்
அறமே பொருள் உடையவனுக்கு அப்பொருளைச்
சேமித்து வைப்பதற்குரிய களஞ்சியம்.

— திருக்குறள்

விற்பனையாகும் இடங்கள் : பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்,
தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.
குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை.

இச்சஞ்சிகை, யாழ். இந்து சமயப் பேரவைச் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் அவர்களால், ஏழாலை, மஹாத்மா அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 19 - 02 - 95 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org